

உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம்—௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ ஐப்பசிமீ ௨௬ (1940 நவம்பர் 11 திங்கட்கிழமை) [இலக்கம்—௫௬]

இடபாரூடர்

நிமிஷம் பதினைந்து கொண்டது ஒரு காஷ்டையாகும். காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலையெனப்படும். கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தகாலமாம். முகூர்த்தமென்பது இரண்டு நாழிகை. முகூர்த்தம் முப்பது கொண்டது இராப்பகலாகிய ஒரு நாள். நாள் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம். பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம். மாசம் ஆறு கொண்டது ஒரு அயனம். அயனம் இரண்டு கொண்டது ஒரு வருஷம். இம் மனுஷவருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒரு நாளாம். தேவர்களுக்கு உத்தராயணம் பகலும் தக்ஷிணாயனம் இராத்திரியுமாயிருக்கும். மனுஷவருஷம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்களுக்கு ஒரு வருஷமாம். தேவவருஷம் பன்னீராயிரங் கொண்டது ஒரு சதுர்யுகமாம். கிருதயுகத்தின் கால அளவைக் கணிக்குமிடத்து 4800 தேவவருடம் எனவும், திரேதாயுகத்திற்கு 3600 தேவவருடம் எனவும், துவாபரயுகத்திற்கு 2400 தேவவருடம் எனவும், கலியுகத்திற்கு 1200 தேவவருடங்களாகு மென்றுங் கூறுவர்; இங்ஙனம் தேவவருடங்களால் அளவை செய்யப்பட்ட யுகங்களுக்கு மானுடவருடத்தைச் சொல்லுங்கால் கிருதயுகத்துக்கு 17,28,000 வருடமும், திரேதாயுகத்துக்கு 12,96,000 ஆண்டும், துவாபரயுகத்துக்கு 8,64,000 ஆண்டும், கலியுகத்துக்கு 4,32,000 ஆண்டுமாம். இந்த நான்கு யுகங்களுங் கொண்ட காலமே ஒரு சதுர்யுகம்.

இப்படிச் சதுர்யுகம் ஆயிரம் திரும்பினால் பிரமாவுக்கு ஒரு பகலாகும்; பின்னும் ஆயிரம் திரும்பினால் பிரமாவுக்கு ஓர் இராத்திரியாகும். ஆகவே, இரண்டாயிரம் சதுர்யுகங் கொண்டது பிரமாவுக்கு ஒரு நாளெனப்படும். அந்த நாள் முப்பது கொண்டது ஒரு மாசமும், அது பன்னிரண்டு கொண்டது ஒரு ஆண்டும் ஆகும். இப்படி நூறு வருஷம் கழிந்தால் பிரமாவினுடைய ஆயுள் நீங்கும். அது விட்டுணு மூர்த்திக்கு ஒரு நாளாகும். இவ்வாற்ற விட்டுணுவினுடைய ஆயுளும் கழியும். கழியவே, உயிர்களும் அண்டங்களும் அக்கினியால் அழியும். உலகமெல்லாம் சுடலையாய்ப் பரிசுத்தமுடையதாய்த் தோன்றும். அந்த மயானத்தில் பரமசிவன் பார்ப்பதி அம்மையார் காணத் திருநிருத்தஞ் செய்து உலாவுவர். அந்த அக்கினிப் பிரளயத்தில் தருமதேவதை அஞ்சி யாம் இவண் இறப்போம்; இனிச் செய்வதென்ன? என்றாலோசித்துச் சிவசந்நிதியை அடைந்து, "மகாதேவரே, சகத்துக்குப் பிரபுவே, ஈசானரே, சரணடைந்த எனைக் காத்தருளும்; அடியேன் இறவாதிருத்தலையும், வலிமையையும், தேவரீருக்கு வாகனமாம் பேற்றையும் தந்தருளுக' என்று பிரார்த்தித்தது.

'தொடருந் தொண்டரைத் துக்கந் தொடர்ந்தவந்—தடரும் பேரருள் செய்'யும் சிவபிரான் இடபத்திற்கு இறவாமையையும், வாகனமாய்த் தம்மைத் தாங்கும் பேற்றையும், ஒப்பற்ற வலிமையையும், அன்பையும், மெய்யுணர்வையும் கொடுத்துப் பின்னரும் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

"தூயனே! கிருதயுகம் முதலிய நான்கு யுகங்களிலும் தருமத்தின் றன்மை இது என்று யாவரும் அறியும்படி முறையே நான்கும், மூன்றும், இரண்டும், ஒன்றுமாகிய கால்களைப் பூமியில் ஊன்றிச் சஞ்சரிக்குதி; உன்னிடத்தில் நாம் எக்காலமும் நீங்காதிருப்போம்; நீயும் நம்மை வந்தடைந்து வாகனமாய்த் தாங்குதி. நம்முடைய தொண்டர்கள் இயற்றுகின்ற பாவமும் புண்ணியமாம்; நம்மைப் புறக்கணித்தவர்கள் பண்ணிய புண்ணியமெல்லாம் பாவமாம். இது திண்ணம். நம்மிடத்து மெய்யன்புடையவர்கள் செய்யும் பாவமும், அன்பில்லாதவர் செய்யும் புண்ணியமும் மாறி, அறமும் மறமுமாவது யாம் உன்னிடத்து உடலில் உயிர் போல வியாபித்திருத்தலினாலேயாம். உன்னிடத்து நாம் என்றுமுள்ளோம்; நீயும் இடபவாகனமாய் நம்மிடத்திருக்குதி; இந்த வடிவையன்றி மானிட வடிவத்தை எடுத்தும் நம்மைப் பூசிப்பாய்" என்று தருமதேவதைக் கருளிச் செய்து அதனை வாகனமாகக் கொண்டருளினர். அந்த நாள் முதலாகப் பரமசிவன் தம்மை மெய்யன்போடு தியானிக்குந் தொண்டர்களுக்கு வரம் கொடுக்கும்படி அந்த ரிஷபவாகனத்தின் மேல் இவர்ந்து தோன்றுவர்.

இது கந்தபுராணம் தக்ஷகாண்டத்திற் கூறப்பட்டது.

சிவபெருமான் இடபவாகனத்தில் எழுந்தருளி வந்து அருள் செய்வாரென்பது "நமோ பப்ரு சாய" [இடபாரூடர் பொருட்டு நமஸ்காரம்] என்ற யசுர்வேதமும், "விடையேறிப் பலிகொள்வான்" என்று திருநாவுக்கரசுநாயனார் தேவாரமும்,

ஊர்வதோர் விடையொன் றுடையானை
யொண்ணுதற் றனிக்கண் ணுதலானைக்
காரதார் கறைமா மிடற்றானைக்
கருதலார் புரமூன் றெரித்தானை
நீரில் வாளை வரால் குதிகொள்ளு
நிறைபுனற் கழனிச் செல்வமேர்
பாருளார் பரவித் தொழுகின்ற
பாமணப் பணியா விடலாமே,

என்று சுந்தரமூர்த்திநாயனார் தேவாரமும்,

"ஏறேறிய விறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே" என்று திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரமும் கூறுகின்றன.

சிவபெருமான் தருமதேவதையாகிய இடபத்துக்குத் தம்மைத் தாங்கும் பேற்றினைக் கொடுத்த செயலை விட்டுணு அறிந்து, அவ்விறைவன் முப்புரதகனம் செய்த காலத்து அன்பின் மேலீட்டினால் இடபருவங் கொண்டு தாங்கினர். அக்காலை, சிவபெருமானைத் தாங்குவதற்குத் தாமொருவரே வல்லுநர் என்று திருமால் இறுமாப்புற்றனர். பத்திவலையிற் படிவோராகிய சிவபெருமான் மாயன் கொண்ட மமதையை அறிந்து, அதை நீக்கும் பொருட்டு ஒரு திருவிளையாடல் புரிந்தனர். அதனால், செவி வாய் நாசிகளிலிருந்து இரத்தம் பெருக, கண்கள் பிதுங்க, அவ்விடபம் அமலனைத் தாங்க ஆற்றல் அற்றதாய்க் கால்களை மடித்துப் பூமியில் விழுந்தது. அப்பொழுது தேவர்கள் துதித்தார்கள். பரமசிவனார் இயங்கியருளினர். விட்டுணுவாகிய இடபம் சிவபெருமானை வணங்கி, "தேவரீருக்குத் தருமதேவதையாகிய இடபமொன்றிருப்பினும், யானும் தேவரீரைத் தாங்குதற்கு வலியைத் தந்தருளுக" என்று பிரார்த்திக்க, இடபமாகும் வரத்தையும் வலிமையையுங் கொடுத்து வாகனமாகக் கொண்டு ஆரோகணித்தருளினர். இது உபதேசகாண்டத்தும், காஞ்சிப்புராணத்தும் கூறப்பட்டது.

இதனை, † "திரியுமுப்புரந் தீப்பிழம் பாகச் செங்கண் மால்விடை மேற்றிகழ் வானை" எனவும்,

‡ கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்று மழலெரித்த வந்நாளி
லிடபமாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ.

எனவும் வரும் திருவிட சுருதிகளாலும் விட்டுணு இடபமாயதாகிய சரித்திரம் உணர்ந்து கொள்க.

*சுலோகபஞ்சக மொழி பெயர்ப்பிலும்,

மூப்பு மிறப்புமில் முகுந்தப் புத்தேண்
மால்விடையாகி ஞாலமொடு தாங்கலின்
....
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந்தோரே.

என்று கூறப்பட்டுள்ளது.

---

† சுந்தரமூர்த்திநாயனர்.

‡ மாணிக்கவாசகர்.

* சுலோகபஞ்சகம் என்பது சிவபெருமானது மகிமையை யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டு அரதத்தாசாரியரால் இயற்றப்பட்டது. மொழிபெயர்த்தவர் ஸ்ரீ சிவஞானமுனிவர்.

சிவபெருமான் தரும தேவதையையும், ஞானத்தையும், திருமாலையும் இடபமாகக் கொண்டது தருமரூபமும், தருமபரிபாலகரும், ஞானமயமானவரும், விட்டுணுவுக்கு மேலானவரும் தாம் என்பதை அறிவித்த உண்மையாகும்.

அறனு நவாவ வானோர்தல்
இறைவ னியானென யற்ற
மாதோ.

என்னுர் பட்டினத்தடிகளும்.

சை. சா. பரிபாலனம்

விமானங்கள் இரவிற் பறக்கும் வசதிகள்

—0—

ரத்மலானையில் அமைக்கத் திட்டம்

இரவு நேரங்களில் விமானங்கள் ரத்மலானை விமான நிலயத்தில் வந்து இறங்கவும் அங்கிருந்து புறப்படவும் சௌகரியமாக விமான நிலைய மைதானத்தை ஒளிமயமாக்குவதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மெஸர்ஸ் டாட்டா கம்பெனியார் தமது விமான சேவைக்கு இத்தகைய வசதி வேண்டுமென்று கேட்பார்களெனத் தெரிகிறது. ஆதலால், வருங்காலத்தில் விமானங்கள் இரவு நேரத்தில் வந்து இறங்குவதற்குப் போதிய வசதி செய்ய வேண்டியது அத்தியாவசியகமாகின்றது. இது சம்பந்தமாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் திட்டத்திற்கு ரூபாய் 1,50,000 செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

அதே சமயத்தில் விமானத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக இன்னும் இரண்டு விமானக் கூட்டங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இக்கூட்டங்களில் ஒன்று விமான நிலயத்திற்கு வரும் "விஸிற்றர்கள்" தங்கும் இடமாகத் தற்காலிகமாக உபயோகிக்கப்படும்.

குறித்த இருகூட்டங்களையும் நிர்மாணிக்க 25,000 ரூபாய்க்கு மேற் செலவாகாதென்று சொல்லப்படுகிறது. பழைய அரசாங்க தொழிற்சாலைக் கட்டிடத்திலிருந்து பெறக் கூடிய இரும்புகளை அவற்றிற்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இத்தேவைக்கும் விமானத்துறையிற் செய்ய வேண்டிய மற்றுஞ் சில சிறு வேலைகளுக்குமாக ரூபா 2,00,000 உபமான்யம் கோருவது பற்றிச் சென்ற செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

புதசந்தாணக் காட்சி

—

(Transit of Mercury)

சூரிய விம்பத்தில் புதன் ஊர்ந்து செல்லுவது போல் தோற்றுகின்ற இக்காட்சியொன்று நிகழும் ஐப்பசி மாதம் 27உ (12-11-40) செவ்வாய்க்கிழமை காலையில் நிகழ்கின்றது. இலங்கையில் சூரியோதயத்துக்கு முன்பே புதன் சூரியவிம்பத்தைத் தீண்டுதலாகிய ஸ்பரிசமும் (Ingress) புதன் சூரிய விம்பத்தில் ஊர்ந்து செல்லும் பாதையில் மத்தியையடைதலாகிய மத்தியமும் நிகழ்ந்து விடும். சூரிய விம்பத்தினின்றும் புதனும் நீங்குதல் அல்லது விடுபடுதலாகிய மோக்ஷம் (Egress) காலை 7 மணி 25 நிமிஷமளவில் நிகழ்கின்றது. ஆகவே சூரியோதய முதல் மோக்ஷகாலமாகிய 7 மணி 25 நிமிஷம் வரை இக்காட்சியின் ஒரு கூற்றைப் புகையூட்டிய தூர திருஷ்டியினுதவியோடு பார்க்கக் கூடியதாயிருக்கும்.

சூரியனை ஓர் மணிக்கூட்டு முகப்பாகப் பாவித்தால் அந்த மணிக்கூட்டு முகப்பில் 3 லிருந்து 10½ யை நோக்கி வரையப்படும் ரேகையில் புதன் ஊர்ந்து செல்லும். ஆனால் தூரதிருஷ்டியினால் சூரியனைப் பிரதிவிம்பித்துப் பார்க்கும்பொழுது இதற்கு எதிர்த்திசையிற் செல்லுவதாகத் தோற்றும்.

இக்காட்சி நிகழும் பொழுது சூரியனும் புதனும் விசாகம் 2-ம் பாதக்கடைசிப்பாகையில் இருக்கின்றன. ஆனால் இதரபஞ்சாங்களின்படி சூரியன் விசாகம் 2-ம் பாத முடிவிலும் புதன் சுவாதி 1-ம் பாத முடிவிலும் இருக்கின்றன. ஆகவே சூரியனுக்கும் புதனுக்குமிடையில் சுமார் 16 பாகை வித்தியாசமிருக்க வேண்டும். இவ்வித்தியாசமிருப்பது உண்மையானால் இப்புத சந்தாணக் காட்சி நிகழ்வ முடியாது.

இங்ஙனம்
சி. சுப்பிரமணிய ஐயர்
7-11-40
திருநெல்வேலி

—

பர்மா மந்திரிகளின் இந்தியாவிஜயம்

—

புதிய வர்த்தக ஒப்பந்தப் பேச்சுக்கள் நடத்துவதற்கு

ரங்கூன் நவ 6

பர்மாப் பிரதம மந்திரியாகிய ஊ ஸோவும், வர்த்தக மந்திரி ஊ. பா. தானும், இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையே புதிய வர்த்தக ஒப்பந்தஞ் செய்து கொள்வதற்காக இம்மாதக்கடைசியில் இந்தியாவுக்கு ஆகாயமார்க்கமாகவருவார்களென்று அசோஸியேட்டட் பிரஸுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

—

மண்டபம் முகாமிலேயே பாதுகாப்பாளர் காரியாலயம்

—

நவம்பர் 1-ந்திகதி கிளைக்காரியாலயம் திறக்கப்பட்டது

மண்டபம் நவ 4

இலங்கைக்குப்போகும் பிரயாணிகளின் வசதிக்காக மண்டபம் பாதுகாப்பாளர் காரியாலயத்தின் கிளை ஒன்று மண்டபம் முகாம் புகைரதநிலயத்துக் கெதிரில் வெகு சமீபத்தில் 1-11-40 முதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இனி இலங்கை போகும் பிரயாணிகள் அனுமதிச் சீட்டுக்காக மண்டபம் பாதுகாப்பாளர்காரியாலயத்துக்குப் போக வேண்டியதில்லை. அச்சீட்டுக்கள் கிளைக்காரியாலயத்திலேயே கொடுக்கப்படும்.

ஜீவ உற்பத்தி

The Origin of Life

மட்டுவில்
(பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர்)
'தில்லைவாசம்'

பூமியினிடத்தே பலவகையான சீவராசிகள் காணப்படுகின்றன. இவைகளிற்சில ஊர்வன. சிலநடப்பன. சில பறப்பன. சிலபேசுவன. பலபேசாதன. சில மாமிசபட்சணிகள். சிலதாவர பட்சணிகள். சில சிறிதுகாலம்வாழ்கின்றன. சிலஅநேககாலம் வாழ்கின்றன. இவ்விதமான சீவவர்க்கங்கள் எவ்வாறு தோற்றின? எக்காலத்திற்றோற்றின? என்பதை அறிதல்பொருட்டு பூகர்ப்ப சாஸ்திரிகளும் (Geologists) விலங்கு நூல்வல்லுனரும் (Zoologists) அனேககாலம் ஆராய்ச்சிசெய்தபின்னர் இவைகளின் உற்பத்திக்காலங்களை நான்கு பருவங்களாக (Periodo) வகுத்திருக்கிறார்கள். தற்போது முதற்பருவத்தை (Primary-Perios)ப்பற்றி ஆராய்வாம்.

பூமிதோற்றிய பின்னும் அதன் ஆதி உஷ்ணம் (Primordial Heat) சிறிது சிறிதாகக் குறைந்து மேற்பாகம் குளிர்வதற்கு அனேகஆண்டுகள் சென்றன. அக்காலத்தில் அதன்மேற்பாகமானது வெப்பமாய் வரண்டிருந்ததால் தாவரங்களாவது பிராணிகளாவது அதிற்சீவிக்கவில்லை. அனேக நூற்றாண்டுகளாகப் பூமியின் மேற்பாகம் இரசாயன பௌதிக மாற்றங்களை (Chemical and Physical Changes) அடைந்தபின்னரே மேற்பாகத்திலுள்ள மண்ணானது செழுமையை அடையப்பெற்றது. இம்மண்ணில் தாவரங்களின் வளர்ச்சிக்கேற்ற வஸ்துக்களாகிய காரம் (Soda), உவர்மண் சுண்ணம் முதலியவைகளும் எரிமலைத் தூசும் ஏராளமாகச் சேர்ந்தன. இவையன்றிச் சுவாசித்தற்கும் உணவிற்குமின்றியமையாத ஜலவாயு (Hydrogen) பிராணவாயு (Oxygen) இருந்தை (Carbon) ஆகியமூலவாயுக்களும் பவனத்திற் செறியப்பட்டன. இம்மூன்று மூலவாயுக்களே ஜீவ உற்பத்திக்குங் காரணமாயின.

சீதோஷ்ணநிலையாவது வேறுபடும் பொழுது பரமாணுக்களும் அணுக்களும் இரசாயனமாற்றமடைவதால் புதுவஸ்துக்கள் உண்டாகின்றன. இவ்வாறு நிகழ்தலை வெளியில் விடப்பட்டிருக்கும் இரும்புத் துண்டுகள் துருப்பிடிப்பதிலிருந்தறியலாம்.

இவ்விதமாகவே பூமியினது சீதோஷ்ண நிலையும், ஈரத்தன்மையும் கடற்கரையோரத்தில் ஓர்வகைப் பாகு போன்ற வஸ்துவை (Jellylike Substance) உண்டாகும்படி செய்தன. இவ் வஸ்துவானது புளித்து நுரைகொள்ளச் செய்யும் பொருட்களின் (Ferments) சேர்க்கையால் பல பகுதிகளாகப் பிரிவதுடன் அசையுஞ் சக்தியையும் அடையப் பெற்றது. இதுவே முதன்முதலாகத் தோற்றிய சீவாணுப் பிராணியாகும். (Protobian) இதன் தோற்றம் 100 கோடி வருடங்களுக்கு முன் நடந்ததாக அனுமானிக்கின்றனர். இவைபோல இச்சீவாணுப் பிராணிகளுள் 1500 ஐ ஒன்றோடொன்று நீளவைத்தாலும் ஒரு குண்டூசியின் தலைப் பாகத்தைத்தானும் குறுக்கிடமாட்டா.

இவை ஒரு அறை (Cell) உடைய மிக நுண்ணிய பிராணிகளாயிருத்தலால் பூதக் கண்ணாடியால் பார்க்கும்போதுதான் நமக்குத் தோற்றும். இவை ஆகாயத்திலும் நீரிலும் பிறவற்றிலும் வசிக்குந் தன்மை யுடையனவாகும். இவைகளிலிருந்து கடலில் வசிக்கும் சீவாணுப்பிராணிகள் தோற்றின. இவை சூரிய வெளிச்சத்தினுதவியால் தங்கட்கு வேண்டிய சீனி (Swgar) மாப்பதார்த்தம் (Starch) களை ஆக்கிக் கொள்கின்றன. இத்தகைய சீவாணுப் பிராணிகள் தற்காலத்தில் நீரிலும் ஈரலிப்பான காலங்களில் மரப்புறப் பக்கங்களில் ஒட்டியும் பச்சைநிறமுடையனவாகக் காணப்படுகின்றன.

முதன்முதற்றோற்றிய சீவாணுக்கள் இரு கிளைகளாகப் பிரிந்தன. ஒன்று தாவர வர்க்கத்தைச் சேர்ந்ததும் மற்றொன்று பிராணி வர்க்கத்தைச் சேர்ந்ததுமாகும். தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவைகள் (Vegetable Organisms) தங்கட்கு வேண்டிய உணவுகளை நீரிலும் காற்றிலும் இருந்து பெறத் தொடங்கின. ஆனால் மிருகவர்க்கத்தைச் சேர்ந்தவைகள் அவ்விதமின்றி (Animal Organisms) தங்களிலும் பார்க்க மிக வலிமை குறைந்த பிராணிகளையே

தொடர்ச்சி 3ம் பக்கம்.

புலால் மறுத்தல்

(சைவத் திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள்)

கொலை பலவகைப்படும். இங்கு பேசப்படுவன இரண்டு. ஒன்று தெய்வங்களுக்கு உயிர்களைக் கொன்று பலியிடல், இன்னொன்று உயிர்களைக் கொன்று தின்றல். இவ்விரண்டும் எங்கும் என்றும் உண்டு.

ஆனால் கிறிஸ்தவ இசுலாமிய நாடுகளில் உயிர்ப்பலியிடல் இப்போதில்லை. அவ்விருமதங்களும் அதனைப் போக்கின. ஆனால் கொலைப்பலி பாவமென்ற கொள்கை அவற்றிற்கில்லை. அத்தெய்வங்களை ஒழிக்க வேண்டும், அதுவே அவற்றின் எண்ணம். அம்மதநூசாரிகள் அத்தெய்வங்களின் இழிவைச் சலியாமல் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டி வந்தார்கள். அதனால் அத்தெய்வங்களெல்லாம் ஒழிந்தன, ஒழியவே அவற்றுக்குரிய அப்பலி வணக்கமும் ஒழிந்தது.

ஆனால் ஹிந்துக்களிடம் அவ்வுயிர்க் கொலை வணக்கம் இன்னும் இருந்து வருகிறது. அறிஞர் அதனைத் தொலைப்பதற்கு முயல்கின்றனர். அதனாலுண்டாய சீவகாருணிய சங்கங்களும் பல. ஆனால் அவற்றால் பூரணபலன் கிடைக்குமா வென்பது சந்தேகந்தான்.

இந்நாட்டிற் பல தெய்வங்கள் வணங்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு தெய்வத்துக்கும் பல கோயில்களுண்டு. ஆனால் அவ்வணக்கக்காரரும் அத்தெய்வங்களும் அக்கோவில்களும் ஒரே சமயத்துக்குக் கட்டுப்பட்டிருந்தன. அச்சமயம் சைவம். அத்தெய்வ வணக்கங்களெல்லாம் சிவாகமரீதியாகவே நடந்து வந்தன. அப்போது அத்தெய்வங்கள் முன் உயிர்ப்பலி செய்யப்படவில்லை. அப்பால் அத்தெய்வங்களுள் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு சமயமாகப் பல சமயங்கள் கிளம்பின. அச்சமயங்களுக்குப் பிரத்தியேக சாத்திரங்கள் அனுசாரிகள் எல்லாம் கிடைத்தனர். அச்சாத்திரங்களில் உயிர்ப்பலி நுழைந்தது. அதனால் அச்சாத்திரானுசாரிகள் தம் தெய்வங்களை வணங்கும்போது அப்பலியையுஞ் செய்யவேண்டியவராயினர். சிவாகமங்களுக்கு இப்பின்னிலை முன்னமேயே தெரியும். ஆகலின் அவை அப்பலியிட்டை எடுத்துக் காட்டி ஆசுர வணக்கமென ஒதுக்கியும் விட்டன.

இன்னொருவகை உயிர்ப்பலி வணக்கமும் ஏற்பட்டது. சில பல ஈனசாதியினர் உளர். அவர் ஒவ்வொருநோயையும் ஒவ்வொரு தெய்வமெனக் கொண்டனர். அவர் கொண்ட அச்சமே அதற்குக் காரணம். அவரெல்லாம் புலாலுணவிற் பெருவிருப்புடையார். அக்கற்பனை தெய்வங்களுக்கும் அவ்விருப்புண்டென்பது அவரெண்ணம். அச்சில்லறைத் தெய்வ வழிபாடுகளை இப்போதும் பல விடங்களிற் பார்க்கலாம். நாட் செல்லச் செல்ல அவ்வழிபாட்டுப் பிணி உயர்ந்த சாதியினருள்ளும் அவ்வின சாதியினர் போன்றவரைப் பற்றிக்கொண்டது. அவர் அவ்வினசாதிப் பூசாரிகளிடம் போய்க் குறிகேட்பர். அப்பூசாரிகள் அவரைப் பார்த்து 'மாரியாத்தாளுக்குக் கோழியொன்றைப் பலியிடும், உம் வீட்டிலே அம்மை வராது. மாடனுக்கு ஆடொன்றை யறுத்துப் பூசை போடும், உம்வீட்டில் வாந்தி பேதி வராது' என்றெல்லாங் குறி சொல்வர். அம்மைக்கும் வாந்தி பேதிக்கும் அஞ்சாதார் யார்? புத்திசாலிகள் அவற்றை நீக்கத் தாமான வழிவகைகளைத் தேடிக் கொள்வர். ஆனால் அவ்வினர் அம்மடப் பூசாரிகளின் சொல்லைக் கேட்டுத் தொடைநடுங்கி அப் பூசை போடத் துணிவர்.

இனி அப்பலியைத் தொலைக்க வேண்டும். தொலைப்பதெப்படி? அவ்வணக்கக் காரரைப் பார்த்து 'நீவிர் அத்தெய்வங்களை வணங்குங்கள். ஆனால் அவ்வணக்கத்திற் செய்யப்படுங் கொலையை மாத்திரம் நீக்கிவிடுங்கள்' என்ற பட்டில் உபதேசிப்பது போதுமா? பல சீவகாருணிய சங்கங்கள் நாளிதுவரை செய்து வரும் உபதேசம் அதுவே. அது முழுப் பயனையுந் தாராது. வேறொரு கடுமையான உபதேசமே செய்யற் பாலது. அதுவுஞ் சைவராலேயே நடைபெற வேண்டும். அவ்வணக்கக் காரருஞ் சைவராகலிற் கோபியார். ஸ்ரீசிவபிரானுரே சைவசமயத்துப் பரதெய்வம். அவரை வணங்கினுல் அம்மை அணுகாது; வாந்தி பேதி வாராது என்ற விசுவாசம் அவ்வணக்கக்காரருள்ளத்தில் அழுந்தி நிற்கவேண்டும். அதற்கேற்ற தீவிர பிரசாரமே அக்கடுமையான வுபதேசமாகும். அவ்வுபதேசத்தால் அச்சில்லறைத்தெய்வங்கள் வீழ்ந்தொழிய வேண்டும். அவற்றை யொழிப்பதற்குக் கட்கங்களாக வுதவுவன 'சென்றாநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோமல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்' என்பன வாதிய சுருதிகளே. தக்கயாகத்திற் சிவமகிமை வெளிப்பட்டது. எனை 'இமையவர் தம் மேனிமுற்றுங் குறைபடுத்துத் தலைத் தழுக்கிச் சவட்டப்' பட்டது. சைவபண்டிதர் அன்ன சரிதங்களை யெடுத்து அவற்றின் உள்ளீடு அவ்வணக்கக் காரருக்கு நன்கு புலனாமாறு எடுத்துச் சொன்னாற் பலனில்லாமலா போம்? கிறிஸ்தவ இசுலாமியருக்குஞ் சில்லறைத் தெய்வங்களை யொழிக்கவேண்டுமென்பதே யாசை. சைவருக்கு அவற்றோடு உயிர்ப்பலியையும் போக்க வேண்டுமென்பது ஆசை. அத்தெய்வங்கள் தொலைந்தாலன்றோ அக் கொலைப்பலியுந் தொலையும். சைவசமய பிரசாரம் பௌருஷமுடையாரால் நடைபெறுக. சாத்திரங்களை அமைத்துக் கொண்டு உயிர்ப்பலி செய்து தெய்வங்களை வணங்கி வருகிற சமயங்களும் அதனால் நசிக்கும். நசிக்கவே அச்சமயிகளும் உயிர்ப்பலி வணக்கத்தை விடுவர்.

சில மடவோர் 'தன்னுமதியா மனத்தைப் பலிகொடுத்து' என்ற அடிகளையும், கண்ணப்ப நாயனார் சரிதத்தையும், வேள்வியையும் எடுத்துக் காட்டித் தம் கொலைவணக்கத்துக் காதாரமென்பர். 'தன்னுமதியென்ற' அடி தாயுமானார் வாக்கு. அவர் காலத்திலுங் கொலை வணக்கமிருந்தது. அவ்வணக்கக் காரரைப் பார்த்து 'ஏ பாவிகளே! நீங்கள் பலிகொடுக்கவேண்டுவது ஆடன்று, உங்கள் மனமே' என்று கூறி அவரை வழிப்படுத்த நிமித்தம் அப்பெரியார் மனத்தை மறியென்று உருவகித்தார். நாயன்மார் பல சொன்னார், பல செய்தார். நாம் அப்படிச் சொல்லமுடியாது, செய்ய முடியாது. அப்படிச் சொல்லவேண்டும், செய்யவேண்டும் என்ற விதியும் நமக்கில்லை. ஆனால் அவர் இருந்த நிலையென்ன? அதனையே நாம் அடையவேண்டும். நமக்குக் குறிக்கோளாகற் பாலது அதுவே. சொல்லுஞ் செயலும் நிலையின் விளைவே. அங்ஙனமாகக் கொலைவணக்கக்காரர் கண்ணப்பர் செயலைக் காட்டி மகிழ்வது பொருந்தாது. பொருந்துமாயின் பெண்டாட்டியைக் கூட்டிக் கொடுப்பவர் இயற்பகையார் செயலைக் காட்டித் தம் பௌருஷம் பேசலாம். 'புன்மைபரம் பசுத் தடிந்தே புரையில்வேள்வி யாற்றியுந், தொன்மைபோ லெழுப்புமாறு கருதிச் சொற்ற வாறுபோல்' என்றது கந்தபுராணம். அப்படி யெழுப்புவார் இப்போதில்லை. ஆகலிற் கொலைவேள்வி கூடாதென்பதே சாத்திரக் கருத்தாமென்க.

அடுத்து ஆராயப்படுவது தின்னும் பொருட்டுச் செய்யப்படும் உயிர்க்கொலை. அதில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். தின்னப்படும் மாமிசங்களின் இழிவு ஒன்று. அப்பொருட்டு உடம்பி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம௵ ஐப்பசி௴ உகூஉ திங்கட்கிழமை

இலங்கையிற் காகிதம் ஆக்குதல்

இக்காலத்தில் உணவுஉடை முதலிய பொருள்களைப் போலக் காகிதமும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களுள் ஒன்றாய்விட்டதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இலங்கையும் இந்தியாவும் நீடித்தகாலமாகக் காகித விஷயமாக மேல்நாட்டையே எதிர்பார்த்திருந்தனவாகும். கீழ்நாடுகளில் முதன்முதல் ஜப்பானே காகிதஞ் செய்யத்தொடங்கிய நாடெனலாம். இப்பொழுது காகிதத்தொழில் விருத்தியில ஜப்பான் மேலைத்தேசங்களோடு ஒப்பாக நிற்கத் தக்கது. இந்த யுத்த காலத்தில் ஐரோப்பாவிலிருந்து போதிய காகிதம் இங்கே தருவிக்கப்படுதல் இயலாதாக, சில மாசங்களாக ஜப்பானிலிருந்து வந்த காகிதமே இங்கு உபயோகிக்கப்படலாயிற்று. அந்நிய நாட்டைக் காகிதத்தின் பொருட்டு எதிர்பார்த்திருந்த இந்தியாவில் இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னே காகிதத் தொழிற்சாலைகள் தாபிதமாகிக் காகிதம் ஆக்குந்தொழிலும் காகித வியாபாரமும் விருத்தியடையலாயின. இந்த யுத்த காலத்திலும் இந்திய நாட்டிற்குக் காகிதப் பஞ்சம் இல்லையென்று சொல்லலாம். சுதேச மன்னர் பரிபாலனத்திலுள்ள மைசூரிற் காகிதம் ஆக்குதற்கான பல தொழிற்சாலைகள் உள்ளன. பம்பாய் கல்கத்தா முதலிய பட்டினங்களிலும் போதிய காகிதம் ஆக்கப்படுகின்றதென அறியலானேம். இந்திய நாடு இனிமேற் காகித விஷயமாக மேலைத்தேசத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லையாகும். இந்தியாவிலும் பிருத்தானிய அரசினரின் முயற்சியாற் காகிதம் ஆக்கப்படவில்லையாம். ஆங்குள்ள சுதேச மன்னர் சிலரும் பாரிய முதற் பணத்தைக் கொண்ட வியாபார சமுதாயத்தினருமே இக் காகிதம் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

இனி, எங்கள் இலங்கையின் நிலைமையைச் சொல்லுமிடத்தில் பிருத்தானிய சக்கராதிபத்தியத்தில் கைத்தொழில் விவசாயத் தொழில் விருத்தி குன்றிய நாடு இலங்கையோடு வைத்தெண்ணுவதற்கு வேறு யாதுமில்லை யெனலாம். இப்படியான ஈனநிலையில் இந்நாடு இருத்தற்குக் காரணம் இங்கே பாரிய தனவந்தர்களில்லாமையும், பெரிய வியாபார சமுதாயங்களில்லாமையும், இப்படியான விஷயங்களில் நமது அரசினர் தலையிடாமையுமே யாகும். இலங்கைக்குக் காகிதப் பஞ்சமேற்பட்டது இப்பொழுது மாத்திரமல்ல; இற்றைக்கு 22 வருடங்கட்கு முன் மகாயுத்தம் நடந்த காலத்திலும் இலங்கை மக்கள் காகிதப் பஞ்சத்தினுற் பெரிதுங் கஷ்டப்பட்டனர். இலங்கை மக்கள் மாத்திரமல்லர் இலங்கை அரசினரும் அக்காலத்திலும் இச்சமயத்திற் போலக் காகிதத்தின் பொருட்டுப் பெரிதுங் கஷ்டப்பட்டனர். அப்படிக்கஷ்டப்பட்ட பின்னரும் நமது அரசினர் இந்நாட்டிற் காகிதம் ஆக்குதற்கான முயற்சிகளையாதுஞ் செய்தலின்றி ஐரோப்பாவிலிருந்தே காகிதத்தை இந்நாட்டிற்குத் தருவித்து வந்தனர். முந்திப் பிருத்தானியருடன் மாறுபட்ட சாதியினரும் பின்னரும் இந்நாட்டிற்குக் காகிதத்தை யனுப்பி வந்தனர். இப்பொழுது யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டுவிட்டால், பிருத்தானியருடன் பகைசாதிக்கும் நாட்டினர், சமர்புரிந்த நாட்டினர் மீளவும் இங்குக் காகிதத்தை மாத்திரமல்ல எல்லாப்பொருள்களையும் அனுப்பி வைப்பரென்றே நாங்கள் எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இந்தக் காகிதம் போன்ற சில இன்றியமையாப்பொருள்களை இங்குள்ளார் தாமாக ஆக்கிக்கொள்ளும்பொருட்டு அரசினர் இந்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாலென்ன என்பதே எமது ஆசங்கை. சீர்திருந்திய நாடுகளுக்குரிய பரிபாலன முறையாகிய அரசாங்க சபைப் பரிபாலன முறை இந்த இலங்கையிலும் அநுசரிக்கப்பட்ட பின்பாயினும் இப்படியான கைத்தொழில்கள் யாதும் விருத்தியாதல் கூடுமென நாம் எண்ணியிருந்தோம். இற்றைவரையில் அப்படியேதும் தொழில் தொடங்கப்பட்டதாகக் காணேம். ஆனால், இப்படியான தொழில்களைச் செய்தற்கான நோக்கங்களும் ஆரம்பிப்பதற்கான முயற்சியும் இந்த அரசாங்க சபையில் இடையிடையே விவாதிக்கப்படுகின்றனவேயொழிய உண்மையாக யாதுஞ் செய்யப்படக்காணேம். இலங்கையிலே "சீமெந்து" உண்டாக்குதற்கு நமது அரசாங்க சபையார் யோசித்தனர்; கோப்பை, பீங்கான், கண்ணாடிப் பொருள்கள் ஆக்கவேண்டுமென்று யோசித்தனர்; யேனாட்டுக் குடிவகை போன்ற பிறண்டி, உவிஸ்கி, உவயின் முதலிய மதுபானங்களை ஆக்க யோசித்தனர்; இவைகளுக்கெல்லாம் முந்தி இலங்கைக்கென ஒரு சர்வகலா சங்கம் தாபிக்கவேண்டுமென்று யோசித்தனர்; யோசித்தலளவில் மாத்திரம் நின்றுவிடவில்லை. இப்படியான கைத்தொழில்களை இலங்கையில் ஆக்குதற்கான முதற்காரணங்கள் இங்குண்டோ என்றும் ஏனைய சௌகரியங்களுண்டோ என்றும் ஆராய்ச்சி செய்தற்காக நிபுணர்களையும் வேற்றுநாடுகளிலிருந்து இங்கே இறக்குமதி செய்து அவர்கள் பொருட்டுப் பணமுஞ் செலவழித்தனர்; அந் நிபுணர்களுட் பலர் மாசக்கணக்கிலும் வருடக்கணக்கிலும் ஆராய்ச்சி செய்துவிட்டுத் தத்தமக்குரிய வேதனத்தையும் பெற்றுக்கொண்டு சித்தாயாத்திரையாகத் தத்தம் சொந்த ஊர்களுக்கு மீண்டுவிட்டனர்; சிலர் இன்னமும் ஆராய்ச்சி வேலை பார்த்துக்கொண்டு வேதனமும் பெற்றுக்கொண்டு இந்நாட்டிலேயே பொறுத்திருக்கிறார்கள்; இதனால் இலங்கை மக்களின் நிலை "எண்ணெய்ச் செலவன்றிப் பிள்ளை வளர்ந்த பாடில்லை" என்ற நிலையிற்றான் நிற்கின்றது.

இப்படியாக இப்பொழுது எங்கள் அதிகாரிகள் காகிதம் ஆக்கும் விஷயத்திலின்னொருவாறு யோசிக்கத் தலைப்பட்டிருக்கின்றனர்; அதாவது காகிதத்தை இந்நாட்டிலே வீட்டுக் கைத்தொழிலாக்கலாமோ என்பதாம். இதனை யோசிப்பவர்கள் யாரென்னில் கைத்தொழில் வியாபாரத் தொழில் விவசாயத் தொழிலென்னும் இத்தொழிற் பகுதி மந்திரிக்குரிய நிர்வாகசபையாராவர். இவர்கள் அரசாங்கசபைக் கூட்டத்தில் இக்காகிதம் ஆக்கும் விஷயமாக ஒரு நிர்ணயத்தை எடுத்தாள விருக்கின்றார்களாம். இந்தியாவிலேகாகிதம் ஆக்கும் தொழில் வீடுகளிற் செய்யப்படுகின்றதென்றும் அப்படியே இலங்கையிலும் இத்தொழிலை வீட்டுத் தொழிலாக்க வேண்டுமென்பதுமே இவர்களுடைய நோக்கமாம். இப்படிச் செய்யும் பொருட்டு இங்குள்ளாரைப் பயிற்றுவதற்குக் காகிதத் தொழில் நிபுணரொருவரை மாசம் 100 ரூபா வேதனத்துடன் இந்தியாவிலிருந்து தருவித்தற்கும் இரண்டு வருட காலத்திற்கு அவரை இம்முயற்சியில் இங்கே தானே வைத்துக் கொள்ளவும் உத்தேசித்திருக்கின்றார்களாம்; ஆனால் இப்படிக் காகிதம் ஆக்கப்பட்டாலும் இலங்கையின் உபயோகத்திற்குப் போதிய காகிதத்தை ஆக்குதல் முடியாதெனக் குறித்த மந்திரிப் பகுதியார் கூறுகின்றனர். அறவே காகிதமில்லாமற் போவதைக் காட்டிலும் கொஞ்சக் காகிதமாயினும் இந்நாட்டில் ஆக்கப்படுதல் நன்மைக் கேதுவாகும். ஆனால் கைத்தொழில் விவசாயத்தொழில் வியாபாரத்தொழில்கட்குரிய மந்திரப் பகுதியினர் இக்கருமத்தை விரைவிற் றொடங்கிச் செய்வரோ என்பதும், அங்ஙனஞ் செய்யினும் இதனால் இங்குள்ள காகிதப் பஞ்சம் நீங்குமோ என்பதும் ஆசங்கைக்கிடமாகும்.

யாழ்ப்பாண நகரசபைத் தேர்தல்

அபேக்ஷகர்களின் விபரம்

யாழ்ப்பாணம் நவ, 9

"யாழ்ப்பாணம் நகரசபைத் தேர்தல்களுக்காக மாகாணத் தலைவர் திரு: எம். பிரசாத்தின் தலைமையின் கீழ் யாழ்ப்பாணம் கச்சேரி மண்டபத்தில் இன்று அபேக்ஷகர்களின் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. எல்லாத் தொகுதிகளிலும் போட்டிகள் இருந்து வருகின்றன. போட்டியிடும் அபேக்ஷகர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம் (1) திரு. ஆர். ஆர். நல்லையா; இப்பொழுது அங்கத்தினராக இருப்பவர் (நிறம்-சிவப்பு) (2) திரு. இம்மானுவேல் திருச்செல்வம் (நிறம்-பச்சை.)

2-ம் வட்டாரம்:- (1) திரு. செவாலியர் எஸ். அருளானந்தம் (நிறம்-பச்சை) (2) திரு. விட்டல் நேசன் (நிறம்-மஞ்சள்)

3-ம் வட்டாரம்:- (1) இப்பொழுது அங்கத்தினராயிருக்கும் திரு. வீ. ஏ. துரையப்பா (நிறம்-பச்சை) (2) திரு. எம். சின்னத்துரை (நிறம்-சிவப்பு)

4-ம் வட்டாரம்:- இப்பொழுது நகரசபைத் தலைவராயிருக்கும் திரு. வி. பொன்னம்பலம் (நிறம்-சிவப்பு) (2) திரு. ஈ. டி. ஹென்ஸ்மென் (நிறம் பச்சை)

5-ம்வட்டாரம்:-(1) இப்பொழுது அங்கத்தினராக விருக்கும் திரு. கே. வி. சின்னத்துரை (நிறம்-சிவப்பு) (2) திரு. வி. எஸ். ராமநாதன் (நிறம்-பச்சை) (3) திரு. வி.டி. நவரத்தினம் (நிறம்-மஞ்சள்)

6-ம் வட்டாரம்:- (1) இப்போது அங்கத்தினராயிருக்கும் திரு. க. ஐயாத்துரை (நிறம்-மஞ்சள்) (2) திரு. எம். ஆசைப்பிள்ளை (நிறம்-பச்சை)

7-ம் வட்டாரம்:- (1) இப்பொழுது அங்கத்தினராயிருக்கும் திரு. எம். பதஞ்சலி (நிறம்-பச்சை) (2) திரு. ஆர். சிவகுருநாதர் (நிறம்-சிவப்பு)

8-ம் வட்டாரம்:- (1) இப்பொழுது அங்கத்தினராக இருக்கும் திரு. லாம். ஏ. சபாபதி (நிறம்-சிவப்பு) (2) இப்போதுள்ள நகரசபையில் நியமன அங்கத்தவரும் உபதலைவருமான திரு. எம். எம். அபூபக்கர் (நிறம்-மஞ்சள்) (3) திரு எஸ். ஏ. வி. ஆபிப் முகம்மது (நிறம்-பச்சை)

திரு. சின்னத்துரை, திரு. இராமநாதன் ஆகிய இருவரின் நியமனப் பத்திரங்களின்மீது திரு. வி.டி. நவரத்தினம் ஓர் ஆட்சேபனையைக் கிளப்பினர். குறித்த தொகுதியிலுள்ள வாக்காளர் பதிவுப் புத்தகங்களில் அவர்களது பெயர்கள் காணப்படவில்லை எனக் குறித்த ஆட்சேபனைக்குக் காரணம் கூறப்பட்டது. தலைவர் ஆட்சேபனையை நிராகரித்துவிட்டார். திரு. ஐயாத்துரையின் நியமனப் பத்திரம் சம்பந்தமாகவும் இதேவிதமான ஆட்சேபனை திரு. ஆசைப்பிள்ளையால் கிளப்பப்பட்டது. இந்த ஆட்சேபனையையும் தலைவர் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஏற்கனவே கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டுள்ளபடி வெவ்வேறு வட்டாரங்களுக்கு டிஸம்பர் 30ந் தேதியன்று 8 மணியிலிருந்து 4 மணிவரை தேர்தல் நடைபெறும்.

வைத்திய அதிகாரியின் திடீர் மரணம்

ஆஸ்பத்திரியில் மூர்ச்சித்து விழுந்தார்

பாணந்துறை, நவ 8

பாணந்துறை டிஸ்திறிக் வைத்திய அதிகாரி டக்டர் ஏ. என். குமாரசுவாமி (வயது 54) இன்றுகாலை பாணந்துறை ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கையில் திடீரென்று மூர்ச்சித்து விழுந்துவிட்டார்.

டக்டர் ஏ. ஈ. ஜி. லாபுரூய் உடனே வரவழைக்கப்பட்டார். அவர் வந்து பார்த்து டக்டர் குமாரசாமி மரணமடைந்துவிட்டதாக அறிவித்தார்.

டக்டர் குமாரசுவாமி 1914ம் ஆண்டில் உதவி டிஸ்திறிக்வைத்திய அதிகாரியாக வைத்திய இலாகாவிற் சேர்ந்தார். அவர் பல வெளியூர்களிற் சேவை செய்தபின்னர் 1925ம் ஆண்டில் ஹுலை டிஸ்திறிக் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டார்! 1938ம் ஆண்டில் அவர் பாணந்துறை டிஸ்திறிக் வைத்திய அதிகாரியானார்.

குருபூசை

நிகழும் விக்கிரமவருடம் ஐப்பசி மாசம் 16ந் திகதி வெள்ளிக்கிழமை பூசலார் நாயனார் சிவபதமடைந்த தினம், இத்தினத்தில் நீர்வேலி நாவுக்கரசர் குருபூசை மடத்தில் குருபூசை நடந்தது. பஜனைக்குப் பின் நடராசப்பிரானது படத்துக்கு பிரம்மஸ்ரீ சு. கார்த்திகேசக் குருக்கள் அவர்களால் நைவேத்தியப் பூசை செய்யப்பட்டது. பின்பு ச. நாகலிங்கம் அவர்கள் நாயனாரது சரித்திரத்தை எடுத்துக்காட்டினர். பின்னர் அடியார்க் கமுதளிக்கப்பட்டது. ஈற்றில் இரவு 9 மணியளவில் குருபூசை இனிது நிறைவெய்திற்று. கடித.

காரியக் கொம்மிற்றிக் கூட்ட முடிவு

காந்திஜி உண்ணுவிரதம் இப்போதில்லையெனும் நம்பிக்கை

ராஷ்டிரபதி ஆஸாத் கூறியவை

வர்தா, நவ 6

காங்கிரஸ் காரியக் கொம்மிற்றிக் கூட்டம் இன்றுமாலை முடிவுற்றது. கொம்மிற்றி செய்துள்ள வேறு தீர்மானங்கள் எதுவும் வெளியிடப்படமாட்டாதென்று தெரிகிறது.

அரசியல் நிலைமை பற்றியே கொம்மிற்றியில் பொதுவாக விவாதம் நடந்ததென்று மௌலானா ஆஸாத் தெரிவித்துக்கொண்டார்.

காந்திஜியின் உண்ணுவிரத சம்பந்தமாக மௌலானா ஆஸாத் கூறியதாவது:-

உண்ணுவிரதமிருக்கும் உத்தேசத்தைக் கைவிட்டுவிடும்படி நாங்கள் காந்திஜியை வேண்டிக்கொண்டோம். எங்கள் வேண்டுகோளுக்கு அவர் இணங்குவாரென்றே நாங்கள் நம்புகிறோம்.

அண்மையில் காந்திஜி உண்ணுவிரதத்தை ஆரம்பிக்கமாட்டாரென்றே விஷயமறிந்த காங்கிரஸ் வட்டாரங்களிற் பேசிக்கொள்ளப்படுகிறது.

காரியக் கொம்மிற்றிக் கூட்டத்தில் மகாத்மா காந்தி தாம் வைஸ்ராய்க்கு எழுதியுள்ள கடிதத்தைப் பற்றித் தெரிவித்துக் கொண்டதாக அறியப்படுகிறது.

காந்திஜியின் புதிய திட்டம்

இம்மாதம் 9ந் திகதி மகாத்மா அவரது புதிய திட்டத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவாரெனத் தெரிகிறது. 7, 8ந் திகதிகளில் அவர் காந்தி சேவாசங்கக் கூட்டத்திலும், சர்க்கா சங்கக் கூட்டத்திலும் பேசுவார்.

நேருஜிக்கு இட்டிருந்த கட்டளையென்ன?

பண்டித ஜவஹர்லால் இரண்டாவது சத்தியாக்கிரஹியாக மகாத்மாவால் தெரிந்தெடுக்கப்பட்ட விஷயம் இப்போது வாஸ்தவமாகிறது. பிரசங்கங்கள் செய்யக்கூடாதென்றும் சுற்றுப்பிரயாணத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்றும் மகாத்மா பண்டிதஜவஹருக்கு எழுதியிருந்தார். அவ்விதமே பண்டிதர் மகாத்மாவின் கட்டளைக்குக் காத்திருந்தார். பண்டிதர் தாம் விரைவிற் கைதியாகப் போவதை அறிந்திருந்தார். வார்தாவிலிருந்த ஓர் அமெரிக்கப் பத்திரிகை நிருபரிடம் அவர் அலகபாத்துக்குத் திரும்பியதும் கைதியாகக் கூடும் எனச் சொன்னாராம்.

மியூனிச்சில் ஹிட்லரின் சொற்பெருக்கு

'இறுதி வெற்றியில் உறுதி'

பிரிட்டன்மீது பழிசுமத்தும் நாசித்தலைவர்

லண்டன் நவ, 9

1929ம் வருடத்திய நாஜிக் கட்சியின் மூனிச் பிரவேசத்தின்போது பங்குபற்றிய பழைய வீரர்கள் வெர்லெயில்ஸ் ஒப்பந்தத்தை முதன் முதலாவது எதிர்த்ததின் வருடாந்தவிழாவை நேற்றிரவு கொண்டாடினார்கள். இந்தக் கொண்டாட்டத்திற்கு ஹிட்லர் வந்திருந்தார். ஹிட்லர் மேடையிலிருந்து இக் கொண்டாட்டத்தின்போது ஒரு பிரசங்கஞ் செய்தார். அவர் பேச ஆரம்பித்தவுடன் எங்கும் ஓரே மௌனம் குடிகொண்டிருந்தது. விழா நடந்த மண்டபம் வெறும் கொடிகளாலும் ஸ்வஸ்திகாவினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடைக்கு அருகே ரோஸன்பர்க், ஹெஸ்லின், ஹிம்லர் ஆகியவர்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. 'இரத்தக்கொடி' மண்டபத்திற்குள் பிற்பகல் 6 மணிக்கு எடுத்துக் கொண்டுவரப்பட்டது. ஹிட்லர், ருடால்ப்ஹெஸ், அடால்ப் வாக்னர் டாக்டர் டிரீச் ஆகியவர்கள் பின் தொடர மண்டபத்திற்கு வந்தார். ஹிட்லர் வந்ததும் அனைவரும் செளிபேபடி நாஜிவணக்கஞ்செய்து வரவேற்றனர் என்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

ஹிட்லர் தன் பிரசங்கத்தில் நாஜிக்கட்சி பாடுபட்டு அதிகாரத்திற்கு வந்த சென்ற நாட்களைப் பற்றி வர்ணித்தார். யூதர்களை முதலில் 'வேட்டையாடியதைப் பற்றியும், அவர்களுக்கெதிராக நடத்திய போராட்டத்தையும் எடுத்துச் சொல்லி "ஒரே அடியாக ஜெர்மனியிலிருந்து யூதர்களை விரட்டியடித்துத் தலைமுழுகி' விட்டோம்" என்னும் பெருமையுடன் கூறினர். சத்துருக்கள் கூறும் ஜோஸியங்கள், ஆருடங்கள் எல்லாம் பலிக்கவில்லை என்று எடுத்துக் காட்டினர். சென்ற 12 மாதத்திற்குள் ஜெர்மனி காட்டியுள்ள இராணுவ வெற்றிப் பிரபந்தங்களையும் கட்டுப்பாட்டையும் விமர்சனம் செய்தார்.

ஹிட்லர் நிகழ்த்திய பிரசங்கத்தை பின்வருமாறு ஜெர்மனசெய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது.

ஹிட்லர் ஒரு மணி நேரத்துக்கு அதிகமாகப் பேசினர். அவர் பிரசங்கமாரியின் முக்கியமான கட்டங்களின்போது கூட்டத்தினின்றும் பலத்த கரகோஷமும், உற்சாக முழக்கமும் கிளம்பிப் பிரசங்கம நடந்த மண்டபத்தில் எதிரொலித்தன.

ஜெர்மானியர்கள் அசைக்கமுடியாத ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, பிரிட்டிஷ் விமானப் படைகள் இரவு நேரங்களில் ஜெர்மனியின் பொது ஜனங்களின்மீது குண்டுமாரி பொழிவதைக் கண்டித்துப் பேசினர் ஹிட்லர். ஜெர்மனியின் பொறுமை சோதிக்கப்பட்டதால், பதிலுக்குப் பதில் பிரிட்டனிற் குண்டுமாரி பொழிவதாகவும் சொன்னார்.

"பிரிட்டன் முதலிலேயே ஜெர்மனிக்கெதிராக யுத்தம் தொடுக்கத் தீர்மானித்து விட்டது. ஜெர்மனியும் பிரிட்டனும் சண்டை செய்யும்படி இழுக்கப்பட்டால் அது மிகக் கடுமையான போராட்டமாகவிருக்கும் என்பது எனக்கு முன்பே நன்கு தெரியும். ஓர் சமயம் உள்நாட்டிலேயே ஒரு போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்றேன். அதுபோலவே இந்தப் போராட்டத்தின் முடிவும் மயிரிழைகூட வித்தியாசமில்லாமல் எனக்கு வெற்றியாகவே மாறும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். ஜெர்மனிய மாநுஷர்களின் யுத்தமாகிய இந்தப் போராட்டத்தைச் சரியா நடத்தவே என்னைப் பலவீனமான ஆபத்துக்களிலிருந்தும் ஆண்டவன் இதுவரையிற் காப்பாற்றி வந்திருக்கிறான் என்றும், நான் உறுதியாக அபிப்பிராயங் கொண்டிருக்கிறேன். ஆகையால் மற்றவர்கள் நடத்திக் காட்டியதுபோல இந்த யுத்தம் முடியாதென்பதே எனது அசைக்க முடியாத தீர்மானம். ஐரோப்பாவைக் குலைக்க விரும்புவது பிரிட்டனே. ஜெர்மனியும் இத்தாலியுமே ஐரோப்பாவைச் சரியாக அமைக்கும். யுத்தம் தொடர்ந்து நடக்கட்டும் என்று பிரிட்டன் கூறினால், அதைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. யுத்தம் நீடித்துக் கொண்டே போகும்; நாம் அதை முடிப்போம். அதைப் பற்றி அவர்கள் சந்தேகப்படத் தேவையில்லை. அந்த முடிவு என்ன? நமதுடைய வெற்றியுடன் அது முடிவடையும்.

"நான் அதிகாரத்திற்கு வந்தபோது சமாதானத்திற்காகத் தயாராக இருந்தேன். ஆயுதப் பரிகரணத்திற்கும் ஆயத்தமாக விருந்தேன். ஆனால்,பிரிட்டன் அதற்கு இணங்கவில்லை. இது அல்லது அது என நான் இரண்டில் ஒன்று என்னும் ஓர் தீர்மானத்திற்கு வந்தேன். நாம் இராணுவ வீரர்களாக இருக்கத் தகுதியற்றவர்களாக இருக்க வேண்டும்; அல்லது இந்த உலகத்தின் முதல்தரமான இராணுவ வீரர்களாகத் திகழ வேண்டும். பின்பு இதற்காகப் பரிபூரணமான ரீதியில் சகல முன்னேற்பாடுகளையுஞ் செய்தேன். புத்துயிர் பெற்றெழுந்த புதிய ஜெர்மனிக்கெதிராக உள்ளே, வெளியே எல்லாம் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவைகள் எல்லாம் பயன் பெறவில்லை. சென்ற மகாயுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் தாங்கள் கொடுத்த உறுதிமொழிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இதுவரையில் எந்தக்காலமும் கண்டறியாத நம்பிக்கைத் துரோகப் படலம் ஆரம்பமாகி விட்டது. ஜெர்மனி பலம் பெற்று வருவதைக் காண சர்ச்சில் கோஷ்டியார் சகித்துப் பிடிக்கவில்லை. அவர்கள் உடனே தன்னரி எழுந்து அண்டிவிட்டார்கள். இந்தச் சர்வநாசக 'கடிவாய்'களுக்கு ஜனநாயகத்தைப் பற்றி என்னகவலை? அது அவர்களுக்கு அக்கறையை அளிக்கவில்லை. ஒரே ஒரு விஷயத்தில்-பிறருடையதை அபகரிப்பதில் அவர்கள் அக்கறையுடையவர்கள். யாராவது ஒருவன் தன்னைத்தானே அபகரிக்கப்படுவதற்கு இடங்கொடுப்பானா? இத்தமாதிரியான நிலைமையில் உள்ள விஷயங்களை அங்கீகரிப்பதா ஜனநாயகத்தவம்? அதை ஜனநாயகம் ஒப்புக்கொள்ளுமானால், அதைப்பற்றி நாம் கவலை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை."

இவ்விதம் பேசிவிட்டு ஹிட்லர் முடிவில வெற்றியடைய ஜெர்மனியர் கொண்டுள்ள குன்றாத உறுதியைப்பற்றியும், தன்னுடைய தலைமையில் தளர்வில்லாத நம்பிக்கையைக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

யுத்த சமாசாரம்

இத்தலியர் கிரேக்கருடன் செய்யும் யுத்தத்திற் சிறிது பின்னிடைவு சேரல், உடனே ஜர்மனிய படை யூகோஸ்லேவியா மூலமாகச் சென்று இத்தலியருக்குத் துணை புரியுமாம். யூகோஸ்லேவிய யுத்த மந்திரி தமது பதவியினின்றும் விலகி விட்டாராம். இத்தலிய மந்திரி யூகோஸ்லேவியாவிற்குச் சென்றுளார். கிரேக்க இத்தலிய யுத்தத்தில் கிரேக்கர் பகைவர் சேனையிற் சிலரைச் சிறைப்படுத்திக்கொண்டு முற்பட்டு நிற்கின்றனராம்.

லண்டனில் நீடித்த நேரமாகப் பகைவர்க்குரிய ஆகாயப்படைகள் வெடிகுண்டு பெய்தன. மத்திய பகுதியும் கிழக்கு கரையோரமும் பகைவரின் ஆகாய விமானங்களாற் குண்டுகளுண்டனவாம்; இதனால் சில வீடுகள் நிர்மூலமாகிச் சிதைந்தன; சிலரிறுஞ் சிலர் மாண்டனர்; சிலர் காயமடைந்தனர்; பகைவருக்குரிய 3 விமானங்கள் அழிக்கப்பட்டன; பிருத்தானிய விமானங்கள் 2 மீண்டு வரவில்லை. சென்ற செவ்வாய்க்கிழமை நடந்த ஆகாயப் படை யுத்தத்தில் 5 விமானங்கள் இரண்டு கமனிகளுடன் சேதமுற்றன. பிருத்தானியருக்குரிய 21 ஆகாய விமானங்களைத் தாம் சிதைத்து விட்டதாகவும் தங்கள் விமானங்கள் 6 சேதம் போயின வென்றும் ஜர்மனியர் கூறுகின்றனர். பிருத்தானிய ஆகாயப்படை ஜர்மனிக்கு மேலாகப் பறந்து சென்று அங்குள்ள மான்கிம் முதலிய துறைமுகங்களைத் தாக்கினவாம். சென்ற வியாழக்கிழமை லண்டனுக்கு மேலாக நடந்த ஆகாய யுத்தத்திற் பகைவருக்குரிய 7 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டனவாம்.

கிரேக்கர் சில தினங்களாகப் பின்னடைகின்றனரெனத் தந்திச் சமாசாரங்களால் அறியக் கிடக்கின்றது.

மிஸ்ரர் சேம்பர்லேனின் மரணம்

பிருத்தானிய சக்கராதிபத்தியத்தின் பிரதான மந்திரியாகவிருந்து இற்றைக்குச் சிலமாசங்கட்கு முன் இளைப்பாறிய ஆங்கில இராசதந்திரியாகிய மிஸ்ரர் நெவில் சேம்பர்லேனவர்கள் தம்மைப் பிடித்த நோய் காரணமாக நேற்றுத் தேகவியோக மாயினராம்.

இந்தியப் பிரச்னையில் பிருத்தானியர் கருத்தென்ன?

இப்பொழுது தீர்த்து வைக்க முடியாதாம்

நவம்பர் 20-ல் வைஸ்ராய் அறிக்கை

புதுடில்லி, நவ, 7௳

இந்தியப்பிரச்சினை இப்போதைக்குத் தீர்த்து வைக்கக்கூடியதாயில்லை யென்றும் யுத்தத்தைவெற்றிகரமாகநடத்துவதைத் தவிர வேறு விஷயங்களில் பிருத்தானிய மந்திரி சபை கவனஞ் செலுத்த முடியாதென்றும் பிருத்தானிய அரசாங்கத்தார் அபிப்பிராயப் படுவதாகத் தெரிகிறது.

தலைவர்கள் எவ்வளவு மதிப்பு வாய்ந்தவர்களாகவும் பிரபல்யம் பெற்றவர்களாகவு மிருந்தாலுஞ் சரி, அரசாங்கத்தின் யுத்தமுயற்சியிற் குறுக்கிட்டால் அவர்கள் விஷயத்தில் உடனுக்குடன் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துத்தானாகவேண்டும் மென்பதும் வருந்தத் தக்க காரியமாயினும் இதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை யென்பதுமே பிருத்தானிய அரசாங்கத்தின் கருத்து என்று தெரிய வருகிறது.

இதன் எதிரொலியையே இப்பொழுது நாம் இந்திய அரசாங்கத்தின் மனோபாவத்திற் காண்பதாக டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

மத்திய சட்டசபையில் வைஸ்ராய் என்ன பேசுவார்

இம்மாசம் 20௳ மத்திய சட்டசபைக் கூட்டத்திற் பேசும் பொழுது அரசாங்கம் கையாளப் போகும் முறையை வைஸ்ராய் தெரிவிப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது.

நிருவாக சபையை விஸ்தரிப்பதற்காகவும் யுத்த ஆலோசனைக் கொம்மிற்றியை நியமிப்பதற்காகவும் பற்பல கட்சிகளுடன் நடத்திய சம்பாஷணைகள் பயனில்லாமற்போய்விட்டன.

அரசாங்கக் கொள்கையில் விசேஷ மாறுதலேதையும் வைஸ்ராய் வெளியிடமாட்டாரென்றே இங்குள்ளவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அதிகார வட்டாரங்களின் அபிப்பிராயங்கள்

"சென்ற ஒரு வருஷமாக இந்தியா பிரச்னையைத் தீர்த்துவைக்க நம்மாலியன்றதை நாம் செய்து தோற்றுவிட்டோம். காங்கிரசும் லீகும் பரஸ்பரம் சமரசஞ் செய்து கொண்டால் அதை நாம் வரவேற்போம். ஆயின் இந்நெருக்கடியான சமயத்தில் முஸ்லிம்லீகை நாம் பகைத்துக்கொள்வதற்கில்லை. இது தான் டில்லியிலுள்ள அதிகாரிகளின் மனோபாவமாகக் காணப்படுகிறது.

இந்தியவிமானிகட்கு விருந்து

லண்டன் நவ 9

தேர்ச்சிபெற்ற சிவில் விமானிகளான பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 24 இந்திய விமானப் படை அதிகாரிகளுக்குச் சமீபத்திற் போர் விமானப் பயிற்சிப் பள்ளிக் கூடத்திற்குப் போவதற்கு முன் மன்னர் தம்பதிகள் ஒரு விருந்தளித்தார்கள். இந்திய விமானிகள் மன்னர் தம்பதிகளுடனும் இரு இளவரசிகளுடனும் ஒருமணி நேரம் கழித்தனர்.

இலங்கையிற் காகித உற்பத்தி

குடிசைத் தொழிலாக்க உத்தேசம்

இந்தியாவைப்போல் நடத்த ஏற்பாடு

இலங்கையிற் காகித உற்பத்தியைக் குடிசைக் கைத்தொழிலாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு கைத்தொழில் மந்திரிசபை செய்து வருகின்றது.

கைத்தொழில் இலாகாவில் இலவசமல்லாத ஒருவரைக் காகித உற்பத்திப் பயிற்சியாளராக நியமிப்பது அரசாங்கசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படும்.

காகித உற்பத்தி இந்தியாவில் ஒரு பிரபலமான குடிசைக் கைத்தொழிலாய் விட்டதென்று சொல்லப்படுகிறது. இலங்கையிற் காகித உற்பத்திக்கு வேண்டிய பொருள்கள் ஏராளமாகக் கிடைப்பதால் இங்கும் அத்தொழில் வெற்றிகரமாக நடக்குமென்று சொல்லப்படுகிறது.

எதிர்காலத்தில் இலங்கையிற் காகிதப் பஞ்சம் ஏற்படுமென்று தெரிகிறது. அவ்வித நெருக்கடி ஏற்பட்டால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் காகிதங்கள் மூலம் நெருக்கடியை ஓரளவுக்குச் சமாளிக்கலாமென்று நம்பப்படுகிறது.

இந்தியாவிலுள்ள காகித உற்பத்தி பயிற்சிஸ்தலமொன்றிற் பயிற்சி பெற்ற ஒருவரின் சேவையைப் பெற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவர் இரண்டு வருஷ ஒப்பந்தத்தின் பேரில் நியமிக்கப்படுவார். அவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 100 சம்பளம் கொடுக்கப்படும்.

பாணந்துறையிற் கடையடைப்பு

பாணந்துறை, நவ, 6

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டதை ஆட்சேபிக்கு முகமாக இங்குள்ள இந்திய யாழ்ப்பாண வியாபாரிகள் இன்று கடைகளை மூடிவிட்டனர். இரவு 7 மணியளவில் மெல் பில்டிங் மேல்மாடியில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. ராம, ஏ. ஷண்முகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நேருஜி இந்தியாவுக்கும் இந்தியர்களுக்குஞ் செய்துள்ள சேவைகளைப்பற்றிப் பேசினார்.

பாணந்துறையில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் கிளை ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் பண்டிதரைக் கைது செய்து தண்டித்த இந்திய அரசாங்கத்தின் செய்கையைக் கண்டிப்பதாய்த் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

பண்டித ஜவஹர்மீது அநுதாபம்

நவரெலியா, நவ 7

பண்டித ஜவஹர்லால் இந்திய அரசாங்கத்தாற் கைது செய்யப்பட்டு நான்கு வருடக் கடுங்காவற் தண்டனை விதிக்கப்பட்டதை யொட்டி அநுதாபந் தெரிவிக்குமுகமாக நவரெலியாவைச் சேர்ந்த இந்தியர்களும் சிங்களவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்கள் பலரும் நேற்றுப்பின்னேரம் தமது தொழில் ஸ்தலங்களை மூடிவிட்டனர்.

பண்டிதரின் படமொன்று நகரின் பிரதான வீதிகள் வழியாக ஊர்வலங் கொண்டுசெல்லப்பட்டது.

அதன்பின்னர் ஒருபெருங் கூட்டம் நடைபெற்றது. அதில் பண்டிதஜவஹரின் வாழ்க்கைச்சரித்திரம் சுருக்கமாகக் கூறப்பட்டது.

மொரட்டுவை ஜல உதவி

நகரசபைத் தலைவரின் மகஜர்

கொழும்பு, நவ: 10

சின்ன நகரங்களுக்கும் பஞ்சமில்லாமல் ஜலம் உதவுதற்கேற்ற வசதிகளை ஏற்படுத்தும் விஷயமாகக் குறிப்பிட்ட பட்டினசபைத் தலைவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான திட்டங்களையும் ஸ்தலஸ்தாபன மந்திரிசபைக்கு அறிக்கையின் மூலம் சமர்ப்பித்திருக்கிறார்கள். மொரட்டுவைப் பட்டினசபையில் தலைவர் ஓர் மகஜரைத் தயார் செய்திருக்கிறார். அதில் தகுந்த நவீன இயந்திரவசதிகளுடன் 1,85,00,00,000 கலன், அளவுள்ள ஜலத்தை நிரப்பிவைக்கக் கூடிய ஒரு தண்ணீர்த் தேக்க அமைப்பை, சாத்தானை என்னும் இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஓர் ஆலோசனை அறிவிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

சிறைக்குட் கஞ்சா நுழைந்த மாயம்

சோற்றுத்தட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது

குற்றஞ் சாட்டப்பட்ட கைதி விடுதலை

கம்பஹா, அக் 8உ

சென்ற அக்டோபர்மாதம் 12ந் திகதியன்று மஹரஹறைச் சிறைச்சாலையில் ஒரு சோற்றுத் தட்டில் 220 கிறெயின் கஞ்சா ஒளித்து வைக்கப்பட்டிருந்ததை யொட்டி மேற்படி சிறைச்சாலையி லிருந்த ஜூனியா என்னும் கைதி கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின்போது மஹர சிறைச்சாலையைச் சேர்ந்த சிறைச்சாலை அதிகாரியான திரு. ஏ. டி. சிமலசூரியாவும் அல்பன்லோ என்னும் சிறைச்சாலைக் காவலாளியும் சாட்சியங் கூறினார்கள். விசாரணை முடிவில் கம்பஹா அடிஷனல் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

மற்றொரு வழக்கு

மற்றொரு வழக்கில் ஏ. அரியதாஸ என்னும் கைதிமீது சிறைச்சாலையில் 5 கிறெயின் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

சிறை அதிகாரிகளால் கோட்டில் ஆஜர் செய்யப்பட்டிருந்த எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி அவருக்கு ரூபாய் 20 அபராதமும் தவறினால் 3 மாதக் கடுங்காவற்சிறையும் விதித்தார்.

நெருக்கடிக் கேற்ற தலைவர் ரூஸ்வெல்ட்

மூன்றாவது முறையாக அமெரிக்கப்பிரஸிடெண்ட்

ஜனநாயகத்தின் வெற்றி

மிஸ்டர் பிராங்க்ளின் டெலனோ ரூஸ்வெல்ட், ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு மூன்றாவது முறையாகத் தெரிவு செய்யப்பட்டு விட்டார். ஜனநாயகம் உதித்த ஐக்கிய அமெரிக்காவில் மூன்றுபதியாகத் தெரிவு செய்யப்படுவதென்பது ஒருவருக்கு எளிதாகக் கிடைக்கக்கூடிய கௌரவமல்ல. இம்முறை அவரோடு போட்டியிட்ட மிஸ்டர். வெண்டல் வில்கியும் போதிய செல்வாக்குடையவர் என்பதில் ஆக்ஷேபமில்லை. இருந்தாலும் ஐக்கிய அமெரிக்காவில் தொடர்ந்து மூன்றுமுறையாக ஒருவரைத் தானே தலைவர் பதவிக்குத் தெரிந்தெடுப்பதில்லையென்று இதுவரை இருந்து வந்த ஐதிகத்தையும் புறக்கணித்து, மிஸ்டர் ரூஸ்வெல்டையே அமெரிக்க மக்கள் தங்கள் தலைவராகத் தெரிந்தெடுத்திருக்கின்றனர். இதற்குமுன் மகத்தான இப்பதவியை வகித்து வந்த 31 பேர்களுக்குங் கிடையாத பெரிய மதிப்பையும் கீர்த்தியையும் 32-வது பிரெஸிடெண்டாகிய மிஸ்டர் பிராங்க்லின் டெலனோ ரூஸ்வெல்ட் இப்பொழுது சம்பாதித்து விட்டார். "இந்த நெருக்கடியான சமயத்தில் இவர்தான் எங்களுக்கு வேண்டும்" என்று ஐக்கிய அமெரிக்க மகாஜனங்கள் சொல்லிவிட்டதாகவே அகில உலகும் இத்தேர்தல் முடிவை அர்த்தப்படுத்திக் கொள்ளும். ஆகவே, மிஸ்டர். ரூஸ்வெல்டுக்கு அவரது தேச மக்கள் இவ்வளவு உன்னதமான கௌரவத்தை மனமுவந்து அளித்ததில் ஒரு முக்கியத்துவம் இருக்கத்தான் வேண்டும்.

நெருக்கடி தீர்ப்பதில் நிபுணர்

உள்நாட்டு விவகாரங்களிலும், வெளித் தேசத் தொடர்பிலும் ஏற்படும் பலசிக்கலான நெருக்கடிகளைச் சுலபமாகத் தீர்த்து வைப்பதில் மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு இணை எவருமில்லை யென்பது ஐக்கிய அமெரிக்க மக்கள் இதுகாலை கொண்டிருக்கும் நம்பிக்கை என்பதையே சரித்திரப் பெருமை வாய்ந்த இத்தேர்தல் முடிவு தெரிவிக்கின்றதெனலாம்.

சென்னை நகரின் புதிய மேயர்

ஸ்ரீ. ஸி. பாஸு-தேவுக்குப் பதவி

சென்னை, நவ 5

நேற்று நடைபெற்ற சென்னைக் கோப்பரேஷன் கூட்டத்தில் ஸ்ரீமான் ஸி. பாஸு-தேவ், சென்னை மேயர் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஸ்ரீ ஸி. சுப்பிரமணியச் செட்டியார் உதவி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மூலோயா அறிக்கைப் பரிசீலனை விபரம்

அரசாங்கசபையில் ஸேர் பரன் அறிக்கை விடுவார்

சென்ற வெள்ளிக்கிழமை உள்நாட்டு நிர்வாகக் கொமிட்டியில் மூலோயாச் சம்பவத்தை யொட்டி மூலோயாக் கொம்மிஷனர் வெளியிட்ட அறிக்கையும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டன. வெள்ளிக்கிழமையோடு இப்பரிசீலனை முடிவுற்றது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் அப்பொழுது சமுகமளித்திருந்தார்.

செவ்வாய்க்கிழமை அரசாங்க சபை கூடும்போது, மூலோயா அறிக்கைகள் சம்பந்தமாக உள்நாட்டுக் கொம்மிட்டிநடத்திய பரிசீலனை பற்றி உள்நாட்டு மந்திரி ஸேர். பரன் ஜயதிலகா சபையில் ஓர் அறிக்கை வெளியிடுவாரென்று அறியப்படுகின்றது.

மூலோயாத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாயிருந்த சமய சந்தர்ப்பங்களைப்பற்றி மூலோயாக் கொம்மிஷனர் தமது அறிக்கையிற்சொல்லியுள்ளதைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒப்புக்கொள்ளவில்லையென்று தெரிகிறது.

கோவிந்தன் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுப்பது சம்பந்தமாக இன்னுங் கடைசியாக எதுவும் செய்யப்படவில்லை யென்று தெரிகிறது.

களுத்துறைத் தொகுதி இடைத் தேர்தல்

ஒரு மாது உட்பட அறுவர் போட்டி

நியமனப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன

களுத்துறை நவ 8

அரசாங்கசபைக்குக் களுத்துறைப் பிரதிநிதி யொருவரைத் தெரிவு செய்வதற்காக நடைபெறவிருக்கும் உபதேர்தலில் மொத்தம் ஆறுபேர் போட்டியிடுகின்றனர். அவர்கள் நியமனப் பத்திரங்கள் இன்று பகல் 12 மணிக்கும் 1 மணிக்குமிடையிற் களுத்துறை உதவி மாகாணத் தலைவர் திரு. பி. ஜே. ஹட்ஸன் முன்னிலையிற் சமர்ப்பிக்கப்பட்டன. குறித்த தேர்தலிற் கீழ்க்காணுவோர் அபேட்சகர்களாக நிற்கின்றனர்.

1 திரு. டயோனிஸியஸ், சார்ல்ஸ் விஜயகுணரத்ன (நிலச் சொந்தக்காரர், பையகலை)

2 திரு. ஒலிவர், ஜீ. டி. அல்விஸ் (முடிக்குரிய வழக்கறிஞர், களுத்துறை)

3 திரு. சார்ல்ஸ், எட்வேட் பெரோரா (நிலச் சொந்தக்காரர், களுத்துறை வடக்கு)

4 திரு. உபாலி பட்டுவந்துடாவை (காலஞ்சென்ற அங்கத்தவரின் குமாரர்)

5 ஸ்ரீமதி ஐ. மார்கரெட் ஆர் (நாகொடை, களுத்துறை)

6 திரு. டி. அல்பெர்ட்ஜயசிங்கா (பழைய தந்தி இன்ஸ்பெக்டர், வேருவிலை)

திரு. ஸி. ஈ. பெரோரா அரசாங்கவேலை சம்பந்தமாக அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்திருப்பதால் அவருக்கு அரசாங்க சபைத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கும் யோக்கியதையில்லையென்று திரு. ஓ. ஜீ. டி. அல்விஸ் சார்பாக அத்வகாத திரு. வி. டி. டி. சொய்ஸா ஆக்ஷேபனை செய்தார். அவருடைய ஆக்ஷேபனை நிராகரிக்கப்பட்டு விட்டது.

திரு. ஸி. ஈ. பெரோரா தமது நியமனப் பத்திரத்தில் தேர்தற்றொகுதியைக் குறிப்பிடாததைச் சுட்டிக் காட்டி மற்றோர் ஆட்சேபனை கொண்டுவரப்பட்டு அதுவும் நிராகரிக்கப்பட்டது.

மஞ்சள் வர்ணத்தை ஒரு பௌத்த அபேக்ஷகருக்கு அளிப்பதால் அவருக்கு அநுகூலம் ஏற்படலாம் என்ற காரணத்தால் திரு. பி. ஜே. ஹட்ஸன் அந்த வர்ணத்தை ஒரு பௌத்தருக்குக் கொடுக்க விரும்பவில்லை. திரு. ஸி. ஈ. பெரோரா அதை ஆக்ஷேபித்தார். பின்னர் அந்தவர்ணத்தை ஸ்ரீமதி ஆருக்குக் கொடுக்கச் சம்மதிக்கப்பட்டது.

வர்ணங்களின் விபரம்

மற்ற அபேட்சகர்களுக்குப் பின்வருமாறு வர்ணங்கள் குறிப்பிடப்பட்டன.

திரு. டி. அல்விஸ் (கபிலம்)
திரு. பட்டுவந்துடாவை (பச்சை)
திரு. விஜய குணரத்ன (சிவப்பு)
திரு. பெரோரா (வெள்ளை) திரு. ஜயசிங்கா (சாம்பல்)

அவசியமாயின் ஹங்கேரி ஜெர்மனியை எதிர்க்கும்

'ராஜீய' சமூக சுதந்திரத்தைப் பாதுகாப்போம்'

ஹங்கேரியப் பிரதம மந்திரி அறிக்கை

புடாபெஸ்ட் நவ 6—

பிரதம மந்திரியான டெலிகி பிரபு இன்று பேசுகையில் 'கிறிஸ்தவ மனோபாவத்திற்கு விரோதமான இயக்கங்களினின்றும் ஹங்கேரியைப் பாதுகாக்க அரசாங்கம் உறுதிகொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:—

"ஹங்கேரி, ஜெர்மனியிடம் விசுவாசத்துடன் நடந்துகொண்டு வரும்; ஆனால் ஜெர்மன் கோரிக்கைகளால் ஹங்கேரியின் ராஜீய சமூக சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்படுமாயின், ஹங்கேரிய அரசாங்கத்தார் அக் கோரிக்கைகளை தீவிரமாக எதிர்த்து நிற்பார்கள்; கிறிஸ்தவ மதக்கொள்கைகள் தேசியம் இவ்விரண்டையும் கடைப்பிடிக்கவேண்டுமென்பதே அரசாங்கத்தின் ஆவல்; இப்பொழுது நம் தேசத்தின் முன்னுள்ள சங்கடங்களை ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை நேரான வழியில் நடத்திச்செல்லவேண்டியதவசியம்;

மழை

இரண்டுவாரகாலமாக இங்கே இடையிடையே மழை பெய்து இன்று அதிகாலை தொடக்கம்விடாமழை பெய்கின்றது; இந்த மழையினால் வந்த வெள்ளம் நெற்பயிருக்கு உவந்ததாகும்; இங்குள்ள விவசாயிகள் இம்மழையைக் கண்டு மகிழ்ச்சியடையலாயினர்.

பஸ்கவிழ்ந்து பரிதாப விபத்து

ஸ்தலத்திலேயே ஒருவர் கோர மரணம்

கம்பஹா, நவ, 7

நேற்றுப் பின்னேரம் 15 பிரயாணிகளை ஏற்றிச்சென்ற ஒரு மோட்டார் பஸ் திவிலிப்பிட்டியைச் சேர்ந்த கிரியுல்லா ரோட்டிற் சறுக்குண்டு கவிழ்ந்ததாற் பாவத்துறையைச் சேர்ந்த ஏ. எம். வி. செய்யது அகமது என்பவர் அதே ஸ்தலத்தில் உடன் மரணமானார். மற்றும் பலர் காயமுற்றுக் கிரியுல்லா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப் பட்டனர்.

குறித்த பஸ் கொழும்பிலிருந்து குருணாகலைக்குச் செல்வதாயிற்று.

கம்பஹா நீதிபதி விபத்துச் சம்பவித்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார். குறித்த ரோட்டு வெள்ளத்தில் மூழ்கியிருந்ததால் நீதிபதியும் அவரது கோஷ்டியும் சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்ல இரண்டுமைல் தூரம் நடக்கவேண்டியதாயிற்று.

பஸ்டிறைவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டனிலிருந்து ஜப்பானியர் வெளியேற்றம்

ஸ்தானிகரும் புறப்பட்டு விட்டார்

வர்த்தக நிலைமையே காரணமாம்

லண்டன், நவ 6

ஜப்பானியரை ஏற்றிச் செல்லதற்காகக் கால்வேக்கு அனுப்பப்பட்ட "ஹகொனமரு" என்ற ஜப்பானியக் கப்பல் 400 பிரயாணிகளுடன் ஜப்பானுக்குப் புறப்படும். அவர்களில் லண்டனிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகரும் ஒருவர். அப்பிரயாணிகளில் பலர் இங்கு தங்களுடைய வியாபாரம் மிக்கப் பாதிக்கப்பட்டிருப்பதாலேயே தாங்கள் செல்வதாகத் தெரிவித்தார்கள்.

பண்டித நேரு

கோரக்பூர் ஜெயிலிலேயே இருக்கிறார்

கோரக்பூர் நவ 6—

பண்டித நேரு இன்னும் கோரக்பூர் ஜெயிலிலேயே இருந்துவருகிறாரென்றும், சில பத்திரிகைகளில் பிரசுரமானதுபோல் அவர் அலகாபாத் நைனி சிறைக்கு இன்னும் மாற்றப்படவில்லையென்றும் தெரிகிறது.

கந்தபுராணக் கவிநுட்பம்

திருக்கல்யாணப் படலம்

[வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப் பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியிட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் முனிகே ளொருநீயிவ் வசல நீங்கித்
தேனார் மருத வளமேயதென் னாடு நண்ணி
வானார் பொதிய மலைமேவுதி வைய மெல்லா
மேனா ளெனவே நிகராகி விளங்கு மென்றான்

ஆயினும் முனிவ, கேள்; நீ யொருவன் மாத்திரம் இந்த இமய மலையை விட்டகன்று தேன் பொருந்திய வயல் வளமிகப் பெற்ற பாண்டி நாட்டை யடைந்து ஆகாய மளவு மோங்கிய பொதிய மலையில் இருக்குதி; அங்ஙனம் இருப்பையேல் இவ்வுலகம் முழுவதும் முன் போலச் சமப்பட்டு விளங்குமென்று கட்டளையிட்டனரென்பது கருத்து.

ஆங்கு வந்துள்ள தேவர்கள் முனிவர்களெல்லாரையும் அகத்தியரொருவரே யொப்பராவாதலின் ஒரு நீ எனப்பட்டது.

[ஒரு நீ - நீயொருவன் மாத்திரம்; தேனார் மருத வளமேய - தாமரை முதலிய பூக்களின் தேன் நிறைந்த மருதவளம் பொருந்திய; [illegible], போதுப்படத் தேனைக் கூறில் அது குறிஞ்சி நிலக் கருப்பொருளாகலின் இங்ஙனமே விரிந்து பொருள் கொள்க; மேனாளென்றது முற்பகலை யென்க; ஆறல் என்பதை வானார் பொதிய மலை மேவுதியானால் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.] (53)

பிறை யொன்று வேணிப் பரனிங்கிது பேசலோடும்
அறை யொன்று தீஞ்சொற் றமிழ்மாமுனி யச்சமெய்திக்
குறை யொன் றியான்செய் துளனோகொடி யேனையீண்டே
யுறையென் றிலைசே ணிடைச் செல்ல வுரைத்தி யெந்தாய்

பிறைச் சந்திரன் பொருந்திய சடைமுடியையுடைய பெருமான் இவ்வாறு கட்டளையிட்டருள, உபதேசிக்கப்பெற்ற இனியசொற்களோடு கூடிய தமிழைச் சந்தேக விபரீதமற வுணர்ந்த அகத்திய மகாமுனிவர் பயமுற்று, எம்பரம பிதாவே, தமியேன் தேவரீருக்கு யாதும் அபராதஞ் செய்ததுண்டோ, பாவியேனை, இங்கு இருத்தி யென்னாது தூரித்த இடமாகிய தெக்கிணத்திற் செல்லும்படி கட்டளை புரிந்தருளுகின்றீர் என்பது கருத்து.

புத்தி பூர்வமாக யாதும் பிழை செய்திலேன், அபுத்தி பூர்வமாக அபராதம் செய்துள்ளேனோ என்றுசொன்பார் "குறையொன்று யான் செய்துளனோ" என்றுசொன்க. பெருமானுக்கும் பிராட்டியாருக்கும் நிகழவிருக்குந் திருக்கல்யாணக் காட்சியைத் தரிசிக்கும் பேறு தவறிவிடுமேயென்ற அச்சத்தினால் தம்மைக் கொடியேன் என்றார்.

[சிவபிரான் உபதேசிக்க, அப்பெருமானிடத்து உபதேசக் கிரமமாய்ப் பெற்றுக் கொண்ட இனிய சொற்கள் விரவிய தமிழை யறிந்த மகாமுனிவரென்பார் "அறை யொன்று தீஞ்சொற் றமிழ்மாமுனி" என்றார்.] (54)

என்னக் குறிய முனிவன்றனை யெந்தை நோக்கி
யுன்னைப் பொருவு முனிவோ ருலகத்தி லுண்டோ
அன்னத் தவனு முனை நேர்கில னாதலானின்
முன்னிற் றவையுந் தவறின்றி முடித்தி மன்னோ.

என்றிங்ஙனம் விண்ணப்பஞ் செய்த அகத்தியமுனிவரை எங்கள் பரமபிதாவாகிய சிவபெருமான் பார்த்தருளி உன்னை யொக்கும் முனிவர் உலகத்திலுண்டோ (இல்லையென்றபடி) அன்னத்தை வாகனமாக வுடைய பிரமாவும் உன்னை நிகர்க்க மாட்டான், ஆதலால் நீ நினைத்தவை யெல்லாந் தப்பாது நிறைவேற்றுவாய் என்பது கருத்து.

அன்னத் தவனும் என்றதில் உம்மை உயர்வுசிறப்பு. அன்னத்தவன் முன்னொருநாள் அன்னவடிவங் கொண்டும் இறைவனுடைய திருமுடியைக் காண்டல் முடியாமையானும் இப்பொழுதும் இங்கு நடக்குந் திருமணக் காட்சியைத் தென்மலையி லிருந்து காண்டல் அவனுக்கு இயலாதாதலானும் அன்னத்தவனு முனை நேர்கிலன் எனப்பட்டது.

[ஏனையோரைக் கூறாது அன்னத்தவனுமுனை நேர்கில னென்று பிரமாவைக் கூறிய தென்னையெனின், பிரமாவுஞ் சிவபிரானிடத்தில் வேத உபதேசம் பெற்று உலகத்திற் பரப்பினனாதலின் அச் சம்பந்தம் பற்றி யென்க; முன்னிற்று தொழிற் பெயர்.] (55)

ஜீவ உற்பத்தி

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

இரையாகக் கொண்டன. இவ் வர்க்கத்தைச் சேர்ந்தவைகளுள் தற்காலத்தில் வசிக்குந் நுண்ணிய பிராணியானது அமீபா (Amoeba) என்று சொல்லப்படும். இது செங்கல் மக்கல் நிறமுடையதாகவும், கண் கால் கை முதலிய அவயவங்க ளற்றனவாகவு மிருக்கும். இதற்கு மேம்ப்றேனொன்றுமில்லை. இது ஊன் தடித்த கூழ்போன்ற திரவபதார்த்தம் ஆகும். இது தனக்கு வேண்டிய உணவைத் தன் தேகத்தை வட்டமாக வளைந்து வெளியே போக விடாது தடுத்துக் கொள்கிறது. இதனுடைய தேகமானது அரை மில்லி மீற்றர் (Half Millimetre) விட்டமுடையதாகும். இதனுடைய தேகமானது சுருங்கவும் விரியவுங் கூடியதாக விருக்கிறது.

உயிரில் பொருட்கள் (Non living Matter) பரமாணு அல்லது அணுக்களால் (Atoms or Molecules) ஆக்கப் பட்டிருப்பது போல உயிர்ப் பொருட்கள் (Living matter) தேன் கூட்டின் (Beehive) அறைகள் போன்ற சிற்றறைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. மனிதனும் சிற்றறைகளின் கூட்டம் அல்லது தொகுதியே.

அளவிடங்கரிய இத்தகைய பிராணிகள் அளவிறந்த ஆண்டுகளாகத் தோற்றி அழிந்து வந்தன. படிப்படியாகப் பூமியின் மேலுள்ள தரைப்பாகமானது உயர்வடைந்து வந்ததால் கடலோரங்களிற் சீவித்த சிற்செடிகளும் பூண்டுகளும் பூமியின் தரைப்பாகத்திற் சீவிக்கவும் சூரிய ஒளியிலிருந்து தங்கட்கு வேண்டிய உணவுகளைப் பெறவுந் தொடங்கின. இவ்விதமாகவே மிருகவர்க்கத்தைச் சேர்ந்த சீவராசிகளும் பூமியின் மேல் வாழ ஆரம்பித்தன.

—வரும்

விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைப்பிரிவு [illegible] என்னுங் காணியில் கோவில்கொண்டெழுந்தருளி யிருக்கும் கொட்டைக் கந்தசுவாமி கோவில் பரிபாலனத்தை யிட்டு யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு 11257-ம் இலக்க வழக்கில் 1940ம் ஆ புரட்டாதி மாதம் 25ந் திகதியைக் கொண்ட தீர்வையின்படி மூன்று தருமகர்த்தாக்களை நியமனம் செய்யவேண்டியிருப்பதாலும் அவர்களில் ஒருவராக அவ்வூர் நாகலிங்கம் இரகுநாதனையும் மற்றொருவராக சொல்லப்பட்ட வழக்கில் வழக்காளிகளாக இருப்போரின் குடும்பத்தைச் சேர்ந்தவரும் குறித்த கோவிலுக்கு அருகராயிருந்தவருமான ஒருவரையும் மூன்றும் தருமகர்த்தாவாக மேற்படி கோவில் வணக்கஞ் செய்யும் உரித்துள்ள பொதுசனங்களில் ஒருவரையும் 1940ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ந் திகதி யன்று யாழ்ப்பாணம் பெரிய கோட்டு நீதிபதி நியமனஞ் செய்யக் கட்டளையிட்டிருப்பதால் அத்தருணம் குறித்தகோவில் வணக்கக்காரர் எவராகுதல் குறித்த தர்மகர்த்தா நியமனத்தைப்பற்றி யாதேனும் சொல்லவேண்டுமாயின் அத்திகதி குறித்த கோட்டு முன்பாக வெளிப்பட்டு அவர்கள் சொல்வதையும் கோட்டார் கேட்டு விசாரித்து மேற்கூறியபடி தர்மகர்த்தாக்கள் நியமனஞ்செய்யப்படுவார்கள் என்பதை இதனால் விளம்பரப்படுத்துகிறேன்,

க. ஐயாத்துரை
மேற்படி 11257ம் இலக்க
வழக்கில் வழக்காளிகள் பிறக்றர்
யாழ்ப்பாணம் 1ம் உ கார்த்திகை 1940
(Mis 143. 7—14-11-40)

மாத்தறை நகரசபை தேர்தல்

அபேக்ஷகர்களுக்குப் போட்டியே இல்லை

மாத்தறை நவ 9

இன்று மாத்தறை நகரசபைத் தேர்தலுக்காக அபேக்ஷகர்களின் நியமனப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. நகரசபைத் தேர்தல் தொகுதியான எட்டு வார்டுகளிலும் அபேக்ஷகர்களுக்குப்போட்டியில்லை எனவே, அவர்கள் போட்டியின்றி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1-வது வார்டுக்கு திரு. வில்பர்ட் குணசேகரவும், 2-வது வார்டுக்கு திரு. வில்மட் பாலசூரியாவும், 3-வது வார்டுக்கு திரு. டி. எப். சமரவீரவும், 4-வது வார்டுக்கு திரு. எஸ். இரத்தின பிள்ளையும், 5-வது வார்டுக்கு திரு. எம். எச். எம். ஜுனூஸும் 6-வது வார்டுக்கு திரு. வி. ஏ. தர்மபாலவும், 7-வது வார்டுக்கு திரு. ஏ. எம். டப்ளியூ. ஜெயசூரியாவும் 8-வது வார்டுக்கு திரு. ஈ. வி. டயஸும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சேவிங்ஸ் வங்கிப் பணம்

எடுப்பதிற் சில கட்டுப்பாடுகள்

கொழும்பு நவ 10

தபாற்கந்தோர் சேவிங்ஸ் வங்கியிலிருந்து பணத்தை மீண்டும் பெறும்போது சிலர் கள்ளத்தனமான முறைகளை மேற்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்களாம். எனவே, ஏமாற்றமான வகையில் பணத்தைப் பெற முயற்சிக்கும் வேலைக்குச் சிறிதும் இடங் கொடுக்காமற் கவனமாக இருக்கவேண்டும் எனும் பிரச்னை இப்பொழுது தபால் இலாகாவின் மேல் அதிகாரியின் ஆலோசனையிலிருந்து வருவதாகத் தெரிகிறது. குறித்த வங்கியிற் பணத்தைப் போட்டு வைத்திருப்பவர்கள் மீண்டும் பணத்தைப்பெற வரும்போது, கையெழுத்து முதலியவைகளை எல்லாம் மிகவும் கவனமாகவும் கண்டிப்பாகவும் பரிசோதித்துப் பணம் வழங்க வேண்டுமென்று ஜெனரல்-தபால் மேல் அதிகாரி உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இலங்கைப் பௌத்த கோஷ்டி

நவம்பர் 13-ல் சாரநாத் விஜயம்

ஸ்ரீநகர், நவ 7

இப்போது இந்தியாவிலிருக்கும் இலங்கைப் பௌத்த யாத்திரிகர்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஏறக்குறைய 100 பேர்களும் புத்த கயாவுக்கு விஜயஞ் செய்த பின், இம்மாதம் 13ந் திகதி சாரநாத்திலுள்ள பௌத்த ஆலயத்தில் நடக்குந் திருவிழாவுக்கு வருவார்கள். இலங்கை மந்திரிகளான திரு. டி. எஸ். சேனநாயகாவும் மேற்படி திருவிழாவுக்கு வருவார்கள்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 15105

பேரம்பலம் வயித்திலிங்கம் பெண் சீதாத்தைப் பிள்ளையும் சுழிபுரம்
வழக்காளி

எதிராக

1 தற்காலம் மலாய் நாட்டுக் கோலம்பூரிலிருக்கும் வட்டுக் கிழக்கு குடிசபாபதிப் பிள்ளை கந்தையா ஏகம் பெண் சேதுப்பிள்ளை LegalRepresentative

2 இராசேந்திரம் பிள்ளை மாணிக்கம் தொல்புரம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 15105-இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் தன்டுக் காணி 1940 ஆம் மார்கழி மீ 7 உ சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்ப்பாணம் 1940 ஐப்பசி மாசம் 11 உ

தீர்வைத் தொகை:-முதல் வட்டி ரூபா 5000 வட்டி இதற்குத் 11-1-40 தொடக்கம் 100க்கு 9 வீத வட்டியையும், கோட்டுச் செலவு ரூபா 243 சதம் 32

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு வட்டுக் கோட்டை கோயிற் பற்று வட்டுக் கோட்டை [illegible] பரப்பு கிலே லாச்சம் 13-ம் விதும் போட்டிக் கோவும், கிணறும், வான்பயிர் செய் பயிர்களும், எல்லை கிழக்கு சபாபதிப் பிள்ளை கந்தையாவினதும் வேலாயுதர் சங்கரப்பிள்ளையினதும் ஆதனம் வடக்கு ஒழுங்கை, மேற்கு வழக்கம் பறை மாரி அம்மன் கோவிலாதனம், தெற்கு மேற்படி கோவிலின் ஆதனமும் வேலாயுதர் சபாபதிப்பிள்ளையின் ஆதனமும் இதடக்கதும்

கொமிஷனர்
R. Satguru

Chulipuram
4. 11. 40
(Mis 144 11. 11. 40)

ஆகாய வசனி அறிக்கைகள்

நவம்பர் 12 செவ்வாய்

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 ஸ்ரீமதி டி. என். கங்காபாய் பாட்டு, 8-25 டாக்கி இசை, (இசைத்தட்டு) 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 கல்லூரிகளுக்கு, 2-00 ஸ்ரீமதி டி. என். கங்காபாய் பாட்டு, 2-30 மாதர்களுக்கு (தெலுங்கு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 தெலுங்கில் செய்திகள், 2-55 மாதர் வாத்தியகோஷ்டி, 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு (தெலுங்கு), 4-30 ஐரோப்பிய சங்கீதம், (இசைத்தட்டு) 5-00 ஸ்ரீமதி டி. ராமதிலகம் பாட்டு, 5-45 வாத்திய சங்கீதம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 பி. கிருஷ்ணசாமி கிளாரினெட், 6-20 வாழ்க்கைச் சித்திரம் எம். என். எம். பாவலர் எழுதியது, 6-45 பி. கிருஷ்ணசாமி கிளாரினெட், 7-00 கடைமுதல்நிகழ்ச்சி (தெலுங்கு) 7-10 நேயர்கள்வேண்டுகோள் (இசைத்தட்டு) 7-20 தெலுங்கில்செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 முசிரி சுப்பிரமண்யஐயர் பாட்டு, 9-00 ஆங்கிலப் பேச்சு, 9-10 இடைவேளை (இசைத்தட்டு) 9-15 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், செய்தி முடிவில் மதராஸ் 2ல் உள்ளபடி, 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-05 கிராமநிகழ்ச்சி (தெலுங்கு) 6-30 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1-ல் உள்ளபடி, 9-30 ஸ்ரீமதி டி. ராமதிலகம் பாட்டு, 10-00 லக்ஷ்மி நாராயணஐயர் (இசைத்தட்டு) 10-15 டி. சௌடையா (இசைத்தட்டு) 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 கீதாரம்பம், 7-45 தமிழில் செய்திகள், 7-55 ஏ. நாராயணஐயர் கோட்டுவாத்தியம். 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஆர். விஸ்வநாதன் பாட்டு, 2-00 கல்வி ஒலிபரப்பு, 2-30 எச். சுப்பிரமணியமும் அகைத்தம்மாவும் (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 ஹிந்துஸ்தானி பாடம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 5-00 வாத்தியகீதம், 5-15 ஏ. நாராயண ஐயர் கோட்டுவாத்தியம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 கே. சாம்பமூர்த்தி (இசைத்தட்டு) 6-15 சங்கீத அப்பியாசம், 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 இலக்கியவாசகம், "சிசுபால வதம்" பி. கே. நாகரத்தின சர்மா, 7-15 நேயர்விருப்பம் (இசைத்தட்டு) தஞ்சை. பி. என். சந்திரசேகரன் பொறுக்கியவை, டி. என். மாணிக்கம், செம்பை வைத்தியநாதபாகவதர், டி. கே. பட்டம்மாள், பல்லடம் சஞ்சீவிராவ், 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 மதராஸில் உள்ளபடி, 8-30 காலஅறிவிப்பு, 9-00 "மாயாஜாலகன்" நாடகம், சோமு எழுதியது, 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

நவம்பர் 13 புதன்

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-00 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 ஆர். எஸ். ரங்கப்பா வீணை 8-20 திரைகானம் (இசைத்தட்டு) பி. ராமதிலகம், ராஜரத்னமும் சூர்ய நாராயணனும், வத்ஸலா, பி. வி. வெங்கடேசன், வகுபிபாயும், சுப்பையாநாயுடுவும், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஆர். எஸ். ரங்கப்பா வீணை, 2-00 பள்ளிக்கூடங்களுக்கு (ஆங்கிலம்) 2-30 தண்டபாணிதேசிகர் (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 தெலுங்கில் செய்திகள், 2-55 வாத்தியகீதம், 3-00 ஒலிபரப்புமுடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு தம்பதிகழ்ச்சி 4-30 ஐரோப்பிய சங்கீதம் (இசைத்தட்டு) 5-00 தாலிபார்த்தி பிச்சஹரி நாகஸ்வரம், 5-45 வாத்தியசங்கீதம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 ராணுவ சங்கீதம், 6-15 இரு சகோதரிகள் சிடைச்சித்திரம் (தெலுங்கு), 6-30 பாலேயூர் கே. வெங்கடராமய்யர் பாட்டு, 7-00 உலகப்போக்கு வ. என். சிவராமன்விமர்சனம், 7-15 வாத்தியகீதம் (இசைத்தட்டு)7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 தாலிபார்த்தி பிச்சஹரி நாகஸ்வரம், 8-30 பாலேயூர் கே. வெங்கடராமய்யர், 9-00 பேச்சு (ஆங்கிலம்) 9-10 இடைவேளை (இசைத்தட்டு) 9-15 உள்ளூர்வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்), 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 9-45 ஐரோப்பியசங்கீதம், 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 உஷாபரிணயம் (தெலுங்கு) சங்கீத உபன்னியாசம் 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஆரம்பகீதம், 7-45 தமிழில் செய்திகள், 7-55 காலைக்கதம்பம் (இசைத்தட்டு) கிருஷ்ணன் தாதி, வி. ஆர். தனம்மாள், எம். கே. தியாகராஜ பாகவதர், கமலாபாய், பி. என். ஞானம கோகோ, கே. எல். ஸைகால், 8-20 ஸ்ரீமதி எம். எஸ். சரோஜினி பாட்டு, 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஸ்ரீமதி எச். எஸ். சரோஜினி பாட்டு, 2-00 கல்வி ஒலிபரப்பு 2-30 வாலிபர் சங்கம் (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 ஹிந்துஸ்தானிபாடம் 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

5-00 வாத்தியகீதம், 5-15 செம்மங்குடி நாராயணசுவாமி ஐயர் வயலின், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 கீவளூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளைபாட்டு, 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 மதராஸில் உள்ளபடி, 7-15 கடைமுதல் நிகழ்ச்சி அல்லது அ இ ரே வாத்திய கோஷ்டி, 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 செம்மங்குடி நாராயணசுவாமிஐயர் வயலின், 8-30 கீவளூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பாட்டு, 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10 00 ஒலிபரப்பு முடிவு.

நவம்பர் 14வியாழன்

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 ஸ்வாகதம் (இசைத்தட்டு 7-35 தெலுங்கில் செய்திகள் 7-45 தமிழில் செய்திகள் 7-55 சிஷ்டு பிரம்மைய சாஸ்திரி வயலின் 8-25 திரைகானம் (இசைத்தட்டு) 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கல்லூரிகளுக்கு 2-00 சிஷ்டு பிரம்மைய சாஸ்திரி வயலின் 2-30 மாதர்களுக்கு 2-45 தமிழில் செய்திகள் 2 50 தெலுங்கில் செய்திகள் 2-55 வாத்திய சங்கீதம் 3-00ஒலிபரப்பு முடிவு

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு 4-30 ஐரோப்பிய சங்கீதம் (இசைத்தட்டு) 5-00 விஞ்சமூரி சீனிவாசாச்சாரி பாட்டு 5-45 வாத்திய சங்கீதம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எஸ். பினாகபாணி பாட்டு 6-30 யார்குற்றம்? நாடகம் வி. சீதாராமன் 6-45 விஞ்சமூரி சீனிவாசாச்சாரி பாட்டு 7-00 அன்னிய விவகாரங்கள் (தெலுங்கு) 7-15 மைசூர் சகோதரர்கள் வீணை (இசைத்தட்டு) 7-20 தெலுங்கில் செய்திகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 திருச்சியில் உள்ளபடி 8-55 பி. பி. ஸி. பூர்வகதை (ஆங்கிலம்) 9-15 உள்ளூர் வர்த்தமானங்களும், அறிவிப்புகளும (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல் ,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி 6-05 கிராம நிகழ்ச்சி (தெலுங்கு) 6-30 மதராஸ் 1ல் உள்ளபடி 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1ல் உள்ளபடி 9-30 எஸ். பினாகபாணி பாட்டு 10-00 டி. கே. பட்டம்மாள் (இசைத்தட்டு) 10-15 எம். எஸ். சுப்புலக்ஷ்மி (இசைத்தட்டு) 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-45 தமிழில் செய்திகள் 7-55 பண்ருட்டி சகோதரிகள் பாட்டு 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவதுஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஜி. வெங்கடராம பிடில் 2-00 கல்வி ஒலிபரப்பு 2-30 பஜனை 2-45 தமிழில் செய்திகள் 2-50 ஹிந்துஸ்தானி பாடம் 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 பண்ருட்டி சகோதரிகள் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 அரியக்குடி இராமாநுஜ ஐயங்கார் (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 புத்தகவிமர்சனம் கே. நாகராஜன் 7-15 "போலீஸ்காரன்" சிறு நாடகம் 7-30 நிகழ்ச்சி அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் (ரேடியோ கச்சேரி) 7-50 கே. எஸ். நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் என். கணேசய்யர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

புலால் மறுத்தல்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வீனமும் உயிரைப் பிரிக்குங் கொடுமை இன்றென்று. பெருச்சாளி, பூனை, நாய், நண்டு, பாம்பு, தவளை, பன்றி, கோழி, ஆடு, மாடு, மீன், மனிதன் முதலிய வற்றின் உடம்புகளையெல்லாம் மாக்கர் தின்கின்றனர். நாய் தவளை பாம்பு முதலிய வற்றின் மாமிசத்தைத் தின்பார் மேல் நாட்டார். அவரை இந்நாட்டில் ஏனையவற்றின் மாமிசத்தைத் தின்போர் இழிவர். பன்றி மாமிசத்தைத் தின்பர் ஹிந்துக்கள். அவரைப் பழிப்பர் இஸ்லாமியர். இஸ்லாமியர் பறையராதியோர் மாட்டிறைச்சியை யுண்பர். அவரை யிகழ்வர் செக்கார் செங்குந்தராதியோர். மனித மாமிசத்தை மகிழ்ந்துண்பர் எஸ்கிமோயர். அவரை மற்ற மாமிச பக்ஷணிகளெல்லாந் தூற்றுவர். அங்ஙனம ஒரு கூட்டத்தாருக்கு ஒருவகை மாமிசமே பிடிக்கிறது. அவர் மற்றவகை மாமிசங்களை வெறுக்கின்றனர். ஏன்? அவரவர் தின்னு மாமிசவகையில் அவரவருக்குத் தேனு ஒழுகுகின்றது? இல்லை. எல்லாவுடம்புகளும் புழுக்கூடுகளே. அவையெல்லாம் மலமயமே. அவற்றில் ஒழுகுவது மலமே. ஆயினும் பழக்கந்தான் அப்பாகுபாட்டிற்கெல்லாங் காரணமென்க. பரிசுத்த ஆகாரத்தை விரும்புபவர் எந்தவுடம்பின் மாமிசத்தையுந் தொடமாட்டார்.

உலகில் எல்லாச் சீவராசிகளும் உணவாலேயே வாழ்கின்றன. ஆனால் ஒவ்வொரு ராசியும் இன்னின்ன உணவைத்தான் உண்ண வேண்டுமென்ற நியமமுண்டு. அந்நியமத்தை மீறி அவை யுண்ணு. அந்நியமத்தை அவ்விராசிகளுக்கு வகுத்தது இயற்கை. மனிதருக்கும் அவ்வியற்கை அவ்வரம்பைச் செய்துள்ளது. ஆனால் அவர் தம் வரம்பை மீறுவர். அவர் தின்னுத வஸ்துக்கள் கிடையா. மலத்தையும் அவர் தின்பர். ஆகையால் அவர் தின்பவற்றை யெல்லாம் அவர்க்குப் பொருத்தமான வுணவு தானென்று கொள்ள முடியாதென்க.

தாவரமும் உயிருக்குடம்பே. ஆனால் அதனை மாமிசமென்று யாருஞ் சொல்கிலர். மாமிசத்திற் காணப்படும் அசுசி தாவரத்திற் கிடையாது. தாவரவுணவினரைச் சாகபக்ஷணிகளென்று வேறு பிரித்தே உலகம் பேசும். ஆகேசமாய் ஒவ்வொரு பாஷையிலும் சாகபக்ஷணி மாமிச பக்ஷணியென்ற பிரிவுப் பெயர்களுண்டு. ஆங்கிலத்தில் Vegetarian என்றும் Non-Vegetarian என்றும் உள்ள பிரிவுப் பெயர்களைக் காண்க.

சிவபிரான் உலகைச் சிருட்டித்தார். ஏன்? அவர் கருணாசாலி. அவரிடமுள்ள கருணைப் பிரவாகத்தது அது உலகைச் சிருட்டிக்கும்படி அவரைத் தூண்டிற்று. அவர் கருணைக்கு ஏங்கி நிற்குங் கூட்டத்தாரா ஒரு சாராருண்டு. அவரிருந்தாற்றான் அக்கருணைசெயலாற்றும். அவர்தான் உயிர்கள். உயிர்கள் எளியன. சிவபிரான் கருணையாலன்றி அவற்றிற்கு வாழ்க்கையில்லை. அஃதிருத்தற் பொருட்டே இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது. சிவபிரானுரின் கருணை விலாசமே இப்பிரபஞ்சம். [illegible] நம்மொவ்வொருவரும் அவ்வுண்மையை யுணரவேண்டும். வலியவரின் கருணையாலேயே எளியவர் வாழமுடியும். மாந்தர் தம்மினும் எளிய பிராணிகளிடங் கருணை புரிக. இன்றேல் அவர் சிவகிருபைக்குப் பாத்திரராகார். கருணையை விதைத்தே கருணையைப் பெற முடியும். அன்றெனில் எள்ளை விதைத்துக் கொள்ளை யறுக்கலாம்.

தாவரத்தைத் தின்பதுமாத்திரம் கருணையாகுமோ வென்பர் சில மாமிச முண்ணிகள். ஆமெனின் அது பொய். தாவரத்துக்கும் உயிருண்டு. ஆகாதெனின் மாமிசத்தைத் தின்பது எப்படித் தப்பாகுமென்று அவர் மேலும் வினவுவர். அவ்வினாக்கள் கொடுமையை ஆதரிக்கவே எழுவன. அவ்வுண்ணிகள் தம் பிறவுணவையும் விடவேண்டும்; அப்பால் தமக்கும் அவர்க்கும் உயிர்க்கொலையில்லாவுணவைக் கண்டுபிடித்துப் பரிசுப்படுத்த வேண்டும். அங்ஙனஞ் செய்தால் அவ்வினாக்கள் கருணைபடிந்தனவாகும். ஆனால் அவர் அவ்வினாக்களைக் கொண்டு வாய்வீச்சு வீசுகின்றனர். மாவுணவினர் வழக்கு அதனால் அடங்கிடுமாம். இப்படிப் புலாலுணவுப் பழக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ள முயல்வது அவ்வுணவினருக்கு யோக்கியமாகாது.

(தொடரும்)

—சிவசேசன்

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவ ரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது நவீகரிக்கப்படாத மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
1938ம் ஆண்டு யூலை மாசம்						
101	21	35		க நாகு	சோனகதெரு	பொன் அறுக்குத்து 7
1938ம் ஆண்டு செப்டம்பர் மாசம்						
1162	11	15		க. சின்னத்தங்கம்	மண்டைதீவு	பொன் தோடு 2
1170	11	16	03	கா. அப்துல்கமீது	சோனகதெரு	பூசாந்திரம் 1
1306	18	10		ச. கன்னி	வெட்டுக்காடு	கல் மோதிரம் 1
1315	19	16		ய சுவாமி	நவாலி	மோதிரம் 1
1387	21	12		வெ கார்த்திகேசு	மண்டைதீவு	அச்சரக்கூடு 1
1427	24	12	40	ஐ சுப்பிரமணியம்	நெடுந்தீவு	அச்சரக்கூடு 1
1494	27	15		மு கந்தையா	புங்குடுதீவு	கல்கவுத்தோர் 1
1938ம் ஆண்டு அக்டோபர் மாசம்						
1564	1	16		வ தில்லையம்பலம்	மண்டைதீவு	கல்த்தோடு 2
1571	1	10		மு மு அப்துல்காதர்	சோனகதெரு	அறுக்குத்து 3 பாதி பின் கோர்க்கு 1
1675	6	12		ப. கணபதிப்பிள்ளை	நெடுந்தீவு	கல்தோடு 2
1719	8	310		M.S.A. முகியித்தீன்பிச்சை	காவாத்துறை றோட்	ஆறுபட்டு மணிக்கோர்வை 1
1725	9	227	03	க முத்துத்தம்பி	வேலணை	நாக்கணம் மூன்றுடன் டைமன் கொடி 1
2012	23	6		சி கன்னி	பண்ணை றோட்	புரூச் 1
1938ம் ஆண்டு நவம்பர்மாசம்						
2181	2	10		இ வேலுப்பிள்ளை	கைதடி	கல்த்தோடு 2
2192	2	13		ச வேலுப்பிள்ளை	நயினைதீவு	கல்த்தோடு 2
2218	3	50		மு செய்யதுப்பிள்ளை மரக்காயர்	சோனகதெரு	கெட்டிக்காப்பு 2
2256	6	10		சி கந்தையா	நயினைதீவு	கல்த்தோடு 2
2391	13	6		சே முகியித்தீன் பிச்சை	சோனகதெரு	குப்பிக்கடுக்கன் 2
2394	13	15		சி கந்தையா	அராலி	அச்சரக்கூடு 1
2416	15	80		உ சபாபதி	மண்டைதீவு	கம்பிப்பூரான்அட்டியல் 1
2484	20	260		கா சி வயிரமுத்து	கொடிகாமம்	பெரிய பதக்கத்துடன் சங்கிலி 1 காப்பு 2
2500	21	15	03	இ குசைப்பிள்ளை	காவாத்துறை	கல்கடுக்கன் 2 மோதிரம் 1
2569	25	12		க முருகன்	அராலி	அச்சரக்கூடு 1
1938ம் ஆண்டு டிசம்பர்மாசம்						
2787	7	7		பா அசருலெவ்வை	சோனகதெரு	கல் பெண்டன் 1
2845	11	122	03	க ஆறுமுகம்	கடையடி	கெட்டிக்கொலுசு 2 அச்சக்காப்பு 2
3026	23	14		செ ஐதுறாப்	சோனகதெரு	மணிக்கோர்வை 1 குச்சி 4
3046	24	15		மோ அன்னமுத்து	காவாத்துறை	காதுப்பூ 2 குப்பிக்கடுக்கன் 2
3090	27	7		ஐ சுப்பிரமணியம்	நெடுந்தீவு	குப்பிக்கடுக்கன் 2
3129	29	50	03	க க முகம்மது தாவுது	காமலடி	பொன் சவடி 1 கவுத்தோர் 1
1939ம் ஆண்டு ஜனவரிமாசம்						
3341	9	95		V. சுப்பிரமணியஐயர்	பருத்தித்துறை	பிலிப்காப்பு 2 குண்டுடன் ஹேவுண் 1 தடை 4 சுதேசிக்காசு 1
3352	9	71	43	வ. செல்லையா	கொட்டடி	கம்பிப்பூரான் அட்டியல் 1
3447	15	10		கா இராசதுரை	ஆனைக்கோட்டை	குப்பிக்கடுக்கன் 2
3658	26	12		சி. செல்லத்தம்பி	அல்லப்பிட்டி	அச்சரக்கூடு 1
3751	31	10		க தாமோதரம்பிள்ளை	மண்கும்பான்	பதக்கம் 1

விற்பனவு நிகழும் விக்கிரமவருஷம் கார்த்திகைமாசம் 11ந்திகதி (26.11.40) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி யளவில் எடுபட்டவகை பிறகீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 145. 11 & 14-11 40.)

பாலர் அபிநயப் பாடல்கள்

(CHILDREN'S ACTION SONGS)

திரு. ஞா. பா. வேதநாயகம்

அவர்களால் எழுதப்பட்டு இலங்கைத் துரைத்தனக் கல்வி அதிகாரிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது

(*Vide Letter 17 th July, 1940*)

இச்சிறு புத்தகத்தில் காணப்படும் கதைகள் வசனநடையிலும், அபிநயப் பாட்டுகளுடனும் யாவரும் சேர்ந்து பாடுவதற்கு உபயோகமாக எழுதப்பட்டிருக்கின்றன. சில பிள்ளைகள் தமிழில் ஆர்வங் கொள்வதற்காகவும் சில மனப்பாடஞ் செய்வதற்காகவும், சில, வேடிக்கைக்காகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அபிநயம் (Action) உரையாடல் (Conversation) நாடகம் (Dramas) படங்கள் (Pictures) மனப்பாடம் (Memoritor) சித்திரம் வரைதல் (Drawing) களிமண்வேலை (Clay Modelling) முதலானவை எல்லாக் கதைகளிலும் புகுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. விலை சதம் 75.

சிந்தாமணி மெட்கேளை இதிற் காணலாம்.

கிடைக்குமிடங்கள்:

யூனியன் பிரஸ்,
தபால் பெட்டி 362,
கொழும்பு.

S. S. சண்முகநாதன
அன்சன்ஸ்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

H 109 1-9 40—28-2-41

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (*Sole Agent*)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

C/o S. Veeragathipillai & Sons.

(Y. 89 B 12-8-39—11-8-40.)

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சீமெந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 50. 3-4-40—3-3-41.

"உண்ணு விரதம் இருக்க வேண்டாம்"

பம்பாய் நவ 6

பம்பாய், இந்திய வர்த்தகர்கள் சங்கமும், பம்பாய் மகாஜனசபையும், மகாத்மா காந்திக்கு அனுப்பியுள்ள விண்ணப்பங்களில், உண்ணு விரதமிருக்க வேண்டாமென்று அவரை வேண்டிக்கொண்டிருக்கின்றன.

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 65 1-4-40—31-3-41) தி

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசுகவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Y 89 A. 21-11-39—20-11-40 தி.

பல் வைத்தியர்

எஸ். சாஸ்பத்திராஜு

லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர். கண் பரிசோதிக்கும்திறமைவாய்ந்தவர்; 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (நேருக்கட்டிடத்துக்குக் கிட்ட)

ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.

உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஓடுகள் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறூக்ஸ் ஸ்பிரோ, சிலிண்டர் பிளேனோ, சிலிண்டர் ஆகியவை விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர ரீதியான சுத்த கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்மலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியாற் செய்த கம்பிகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமாக நவீன பிரேம்களும் எம்மிடம் உண்டு.

டக்டர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.

எங்கள் விலைக்குறைவு. நியாயமானது

Y 19. 2-5-40—1-5-41

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

பத்திரக்கிரயம்

[illegible]

தமிழ் ரூபா 5.00 இங்கிலீஸ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஸ் தமிழும் 12.00
[illegible] பகுதி 9.00 இங்கிலீஸ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருதரம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponna, East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 11th November, 1940.